விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பதினாறு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 10 வெள்ளிக்கிழமை (23.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

மானிப்பாய் பொலிஸார் அதிரடி

# கப்பம் கேட்டு கடத்தப்பட்ட இருவரும் மீட்கப்பட்டனர்

## கடத்தல்காரர்கள் மூவரும் மாட்டிக் கொண்டனர்

நவாலி வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை கப்பம் கோரி கடத்தப்பட்ட இருவரும் மானிப்பாய்ப் பொலிஸாரால் நேற்று யாழ். சுண்டுக்குளிப் பகுதியில் வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டனர். அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கப்பப் பணம் செலுத்தச் சென்றபோது இருவரையும், கடத்தப்பட்டவர்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டில் வைத்து ஒருவரையுமே பொலிஸார் கைது செய்தனர். (02 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சர்களுக்கான சத்தியப்பிரமாணம் இன்று

### முன்னைய அமைச்சர்கள் சிலருக்கு அதே அமைச்சு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கான சத்தியப்பிரமாணம் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

இம்முறை 40ற்கும் குறைவான அமைச்சர்களே, அமைச்சர்கள் குழுவில் இடம்பெறுவார்கள் என அரசியல் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுக்கள் இந்தமுறை இல்லாது செய்யப்படுவதுடன் பிரதி அமைச்சுக்கள் மாத்திரம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பிரதி அமைச்சுக்களும் 40ற்கும் குறைந்தளவிலேயே இருக்கும் எனவும் அரசியல் தரப்புக்கள் தெரிவிக்கின்றன. இந்த முறை (15 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற சபாநாயகராக சமல் ராஜபக்ஷ பதவியேற்றார்

(கொழும்பு)

7-வது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக சமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார். பிரதமர் டி.எம்.ஜயரட்ண, சமல் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய அதனை வழிமொழிந்தார்.

இதனையடுத்து பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது. பிரதி சபாநாயகராக பிரியந்த ஜெயசேகர தெரிவு செய்யப்பட்டார். இவரது பெயரை ஐக்கிய (16 ஆம் பக்கம் பார்க்க)



## உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் குழாம் தயாரித்த க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான

பௌதிகவியல்

பாட மாதிரி வினாத்தாள்

## புலனாய்வுத்துறையினர் எனக் கூறி மேற்கொள்ளப்பட்ட கடத்தல் நாடகம்

### மீண்டவர்களில் ஒருவர் விபரிப்பு

(மானிப்பாய்)

கடத்தல்காரர்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் எனத் தெரிவித்து அண்மைய சில நாள்களாகப் பழகி வந்ததாகக் கடத்தப்பட்டவர்களில் ஒருவரான மகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கராச் உரிமையாளரான மகேந்திரனுடன் கடத்தல்காரர்கள் அண்மைக்காலமாகத் தாம் இராணுவப் புலனாய்வாளர்கள் எனத் தெரிவித்து தொடர்பை ஏற்படுத்தினர்.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை மகேந்திரனுடன் தொடர்பு கொண்ட கடத்தல்காரர்கள் தாம் கொழும்புக்குச் செல்லவுள்ளதாகவும் தமக்குப் பலகாரங்கள் பிடிக்கும் எனவும் இருந்தால் கொண்டு வந்து தருமாறும் கேட்டிருந்தனர்.

இதனால் பலகாரங்களைக் கொண்டு செல்லும் போது தொழில் ரீதியாக நட்பு வைத்திருந்த மகேந்திரன் என்னையும் அழைத்துச் சென்றார்.

அப்போது யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்பாக நின்ற கடத்தல்காரர்கள் என்னை அங்கு விட்டுவிட்டு மகேந்திரனை மட்டும் அழைத்துச் சென்றனர்.

பின்னர் சில மணி நேரத்தில் திரும்பி வந்த மகேந்திரன் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற கன்னி உரையில் அரசைத் தாக்கிய பொன்சேகா

(கொழும்பு)

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி நிலை பெற வேண்டும் என்று ஜெனரல் சரத் பொன்சேகா தனது முதலாவது நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த 12 தினங்களில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டதையடுத்து சரத் பொன்சேகா பொது இடத்தில் பேசிய முதலாவது தருணம் இதுதான்.

சுருக்கமாக நாடாளுமன்றத்தில் அவர் பேசும் போது, முதலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகரை வாழ்த்தியபிறகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினார்.

இலங்கைக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் 16 பேர் நேற்று முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை பல்வேறு காரணங்களைக் கூறி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்ற சட்ட மாஅதிபர் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந் நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலைக்குத் தம்மை மாற்றினால் அங்கு பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகவேண்டி வரும். எனவே தம்மை இடமாற்ற வேண்டாம் எனக் கோரியே அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். (சு)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாறி மாறி மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்தில் காதலர்கள் காயம்

## யாழ். போதனா வைத்தியசாலையினுள் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிலையத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்ற கத்திக் குத்துக் தாக்குதலில் காதலர்களான இளைஞனும் யுவதியும் காயமடைந்தனர்.

இது தொடர்பில் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்ததாவது,

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிலைய தொழில் நுட்ப உத்தியோகத்தராக சி.கமகே (வயது 26) என்ற சிங்கள இளைஞன் கடந்த 15 நாட்களுக்கு முன் நியமிக்கப்பட்டார்.

இவரைப் பார்க்கவென அவரது காதலியான ரி.அஞ்சலி (வயது 22) என்ற தென்னிலங்கை வைத்தியசாலை ஒன்றில் தாதிய உத்தியோகத்தராக பணியாற்றும் யுவதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார்.

யாழ். வந்த அவர் தனது காதலனான தொழில்நுட்ப உத்தியோகத்தரைச் சந்திக்கச் சென்ற போது இவருக்குமிடையில் மோதல் இடம் பெற்றதாகவும் இதன் போது மாறிமாறி மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்துத் தாக்குதலில் இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# சரணடைந்திருந்த மூவர் விடுதலை

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சாவகச்சேரி நீதிமன்றில் சரணடைந்திருந்த மூவர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வருடம் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலையின் போது உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இவர்கள் மூவரும் சரணடைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மூவரும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு ஆண்களும் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவருமே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

விடுவிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மட்டக்களப்பில் இருப்பதால் அவர்கள் வந்து பொறுப்பேற்கும் வரை பிரஸ்தாப பெண்ணை இரட்சணைசேனை இல்லத்தில் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-1)

# கப்பம் கோரி கடத்தப்பட்ட...

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன ஜெயக்கொடி தகவல் தருகையில் நவாலி வடக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மகேந்திரன் (வயது 40) மற்றும் பரராஜசிங்கம் மகேஸ்வரன் (வயது 25) ஆகிய இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் யாழ்.நகருக்குசென்றபோது இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

இதில் மகேந்திரன் மானிப்பாயில் கராஜ் நடத்திவருவதுடன் மகேஸ்வரன் வாகனங்களுக்கான மின் இணைப்பு வேலைகள் செய்பவர்.

இருவரையும் கடத்திச் சென்று இனந்தெரியாத குழுவினர் மகேந்திரனின் குடும்பத்தினரிடம் 50 இலட்சம் ரூபாய் பணமும் மகேஸ்வரினின் குடும்பத்தினரிடம் 30 இலட்சம் ரூபாய் பணமும் கப்பமாக தொலைபேசி மூலம் கோரியிருந்தனர்.

மேற்படி தொகைப் பணத்தை ஒப்படைத்தால் மட்டுமே இருவரும் விடுவிக்கப்படுவர் என்றும் இது தொடர்பில் பொலிஸாரிடமோ படையினரிடமோ முறையிடக் கூடாதெனவும் கடத்தல்காரர்கள் மிரட்டியிருந்தனர்.

இந் நிலையில் தமது கப்பத் தொகையை நேற்று முன்தினம் இரவு குறைத்துக் கேட்ட கடத்தல்காரர்கள் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகையும் ஒரு இலட்சம் ரூபாய் பணமும் ஒப்படைத்தால் இருவரையும் விடுவிக்க முடியும் என கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அறிவித்தனர்.

அத்துடன் குறித்த தங்க நகைகளையும் பணத்தையும் சங்கானைச் சந்தைக்கு முன்பாக கொண்டுவருமாறும் வரும் போது வாகனத்தின் அடையாளத்தை தெரிவிக்குமாறும் கடத்தல்காரர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளையும் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தையும் ஆட்டோ ஒன்றில் மானிப்பாய் பொலிஸார் கொண்டு சென்றனர்.

அப்போது நகைகளையும் பணத்தையும் பெறுவதற்கு கடத்தப்பட்ட மகேந்திரனின் மோட்டார் சைக்கிளில் வந்த கடத்தல் காரர்கள் இருவரை சங்கானை சந்தைப்பகுதியில் வைத்து மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடத்தப்பட்ட இருவரும் தங்கவைக்கப்பட்டிருந்த சுண்டுக்குளி சுவிட்ச் லேனில் உள்ள வீட்டுக்கு பொலிஸார் சென்றனர்.

குறித்த வீட்டில் கடத்தல் காரர் ஒருவர் காவல் இருக்க கடத்தப்பட்ட இருவரும் தனித்தனி அறையில் வாய், கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்தனர்.

உடனடியாக குறித்த இருவரையும் மீட்டதுடன் கடத்தல் காரர்களின் மூன்றாவது நபரையும் பொலிஸார் கைது செய்தனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன ஜெயக்கொடி தெரிவித்தார்.

இதேவேளை இக்கடத்தல் கும்பலுக்கும், நவாலி அட்டகிரியில் வைத்து சிறுவன் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# மின்சாரசபை ஊழியர் சங்கத்தின் நூல் வெளியீடும், பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் மின்சார சபையின் வட மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் மலர் வெளியீட்டு விழாவும் பொதுச் சபைக் கூட்டமும் நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் நடைபெறும்.

ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வாக ஓய்வு பெற்ற மேலதிக பொதுமுகாமையாளர் வே.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கிறனர்.

நூல் அறிமுக உரையை பல்கலைக்கழக வேலைகள் இயந்திரவியலாளர் சி.தயாபரன் நிகழ்த்துவார். நூலின் முதல் பிரதியை இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் பி.நாகரட்ணம் பெற்றுக்கொள்வார்.

இந் நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் புதிய செயற்குழுவும் தெரிவுசெய்யப்படவுள்ளது. (ச)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பாலியல் குற்றச்சாட்டு கைதி தப்பினான்

## பொலிஸார் வலை வீச்சு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடையில் இளம் யுவதி மீது பாலியல் வல்லுறவு புரிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர் நேற்று அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

வவுனியாவிலிருந்துவந்த 24 வயது உடைய யுவதி ஒருவர் கட்டுடையில் உள்ள உறவினர்களை பார்ப்பதற்காகச் சென்றபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மானிப்பாய் பஸ் தரிப்பிடத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் இருவர் தாம் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி அவரை அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினர்.

இச் சம்பவத்தை அறிந்த கிராம மக்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து மானிப்பாய் பொலிஸிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ் குற்றவாளி இருவரும் மானிப்பாய் பொலி ஸாரால் மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டனர்.

இதில் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு தப்பி ஓடியுள்ளார்.

இவரைப் பார்ப்பதற்காக நேற்று மாலை ஒரு குழுவினர் சென்றதாகவும் இதன் பின்னரே அவர் கைக்குப்போடப்பட்டிருந்த விலங்கினை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தப்பி ஓடிய கைதியை பிடிப்பதற்காக குடாநாடு எங்கும் பொலிஸார் வலை வீசியுள்ளனர். (ச-7)


# இலங்கை மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வி கற்பதற்கான ஓர் அரியவாய்ப்பு.

சேவாலங்கா உயர் கல்வி நிறுவனமும் பெங்களூர், ரஜீவ்காந்தி, விஸ்வேஸ் வராய, பாரதியார் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இலங்கை பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பெற முடியாத மாணவர்களுக்கு உயர் கல்வி கற்ப தற்கான ஓர் அரியவாய்பை வழங்குகிறது. பாடநெறிகள் பின்வருமாறு.

**UNDERGRADUATE COURSES**

- Bachelor of Physiotherapy
- Bachelor of Computer Application
- B.Sc-Nursing
- B.Sc-Biotechnology
- B.Sc-MLT
- B.Sc-Biochemistry
- B.Sc - Fashion & Apparel Design
- B.Sc-Genetics
- B.Sc-Micro biology
- B.Sc-Computer Science
- BDS- Dental Science.
- BBM- Business management
- BHA- Hospital Administration
- B.Com
- B.Pharma (Pharmacy)
- B.E(Computer Science & Engineering)
- B.E(Electronics and Communication)
- B.E(Civil Engineering)
- B.E(Mechanical Engineering)
- B.E(Information Science & Engineering)
- B.A-Journalism, Psychology, English, Law, tourism, History,
- BHM-Hotel Management

**DIPLOMA COURSES**

- Diploma in general Nursing and midwifery ,Pharmacy ,Electronics & Communication, Electrical & Electronic, Mechanical, Computer science, Civil, Architecture, Information Technology, Hotel management, X-Ray Technician's & Hospital management

**Post Graduate Courses**

- MBA
- M.Sc-Computer science, Electronics & communication, Mathematics, Physics, Chemistry (Bio & Organic), Microbiology, Bio technology, Genetics, Food Processing, Apparel Technology & Management, Nursing
- M.Com
- MBA
- M.Pharmacy
- M.A
- Master of Physiotherapy
- Master of Tourism Administration
- Master of Social Work

விண்ணப்பங்கள் கல்விசார் விபரக் கொத்துகள் சேவாலங்கா மாவட்டகாரி யாலயத்திலும் மற்றும் சேவாலங்கா உயர் கல்வி நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 15/05/2010 ஆகும். விண்பதாரிகள் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந் தெடுக்கப்படுவர்.

சேவாலங்கா உயர் கல்வி நிறுவனம்
சேவாலங்கா மன்றம்
216/1, தெகிவளை வீதி,
மகரகம.
Tel:- 0113166334/0113166335
Fax:- 0112850622
E mail:-anavaloga22@gmail.com

54/2 சேவாஇல்லம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
Tel:- 0217451760/0217451761
E mail:- jaffna@sewalanka.org

(சி-146)



# தேவை

வைமன் வீதி, நல்லூரில் இயங்கும் சென்றல் கிளினிக்கிற்கு தாதிய உதவியாளர் பெண் தேவை. சுற்றாடலில் இருப்பவர் விரும்பத்தக்கது.

நேரில் வரவும்:
காலை 7-8 மணி மாலை 4-6 மணி
சென்றல் கிளினிக்
40/3, வைமன் வீதி, நல்லூர்.
(1236)

# தேவை

யாழ். நகர் மத்தியில் பஸ் நிலையம் முன்பாக இயங்கும் 'யாழ் பேபி நீட்ஸ்' இற்கு முன்னைய அனுபவம் உள்ள கணக்காளர் (Accountant ) தேவை.

நேரில் வரவும்:
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(1235)

# ஸ்ரீராம ஜெயம்

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும். T.P.:0778752163

414, சன்ஜெயா உணவகம்,
மேல்மாடி அறை இல.02
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(1224)

# காணி விற்பனைக்கு

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் 8 பரப்புக்காணி உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.

Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770
(1212)

# இன்று ஒரு தகவல்

## ஆபத்தில் உதவி

ஒருத்தன் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அதைத் தாண்டித் தான் அந்தப் பக்கம் போக வேண்டும். அங்கேதான் அவனது கிராமம் இருந்தது.

மிகவும் இருட்டி விட்டதால் பயம் தொற்றிக் கொண்டது. என்ன செய்யலாம் என்று ஒருமரத்தடியில் உட்காந்து யோசித்துக் கொண்டிருக்கும் போது அவ்வழியில் இன்னொருத்தன் வந்தான்.

நல்ல வேளை ஒரு துணை கிடைத்துவிட்டது என்று நினைத்தான் இவன்.

"என்ன? நீயும் இந்தக் காட்டு வழியாக அடுத்த பக்கம் போக வேண்டுமா?" என்று கேட்டான்.

அவன் "ஆமாம்" என்றான்.

"அப்படியானால் இந்த நிமிடத்திலிருந்து நாமிருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் துணையாக இந்தக் காட்டு வழியாக போவோம். எனக்கு ஆபத்தென்றால் நீயும் உனக்கு ஆபத்தென்றால் நானும் துணையாக இருப்போம் என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

அதன்பின் அவர்களிருவரும் புறப்பட்டுக் காட்டு வழியாகப் போனார்கள்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய கரடி அவர்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தது.

அதைக் கண்டார்கள். அவ்வளவுதான்! ஒருத்தன் கொடுத்த வாக்குறுதியை மறந்தான். செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறந்தான். கிடுகிடுவென்று ஒரு மரத்தின் மீதேறி உட்கார்ந்து கொண்டான். இன்னொருவனுக்கு மரம் ஏறத் தெரியாது. தனியாக நின்று கரடியை சமாளிப்பதும் கஷ்டம்.

என்ன செய்யலாம் என்று யோசித்தான். அப்படியே தரையில் படுத்து விட்டான். மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவன் போலக் கிடந்தான்.

அந்தக் கரடி பக்கத்தில் வந்து முகர்ந்து பார்த்து ஆள் இறந்துவிட்டான் என்று நினைத்து அப்பால் போய்விட்டது.

கரடி போன பின்பு மரத்திலிருந்தவன் மெதுவாக கீழே இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனைப் பார்த்து,

"அது சரி... உன்னிடம் அந்தக் கரடி காதோரமாக ஏதோ சொல்லிச்சே... என்ன சொல்லிச்சு? என்று கேட்டான். அதற்குப் படுத்திருந்தவன் பதில் சொன்னான்.

"ஆபத்துக்குதவாத உன்னைப் போன்ற நண்பர்களை நம்பாதே! என்று சொல்லிச்சு?" என்றான். இப்படி ஒரு கதை உண்டு.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்,

நட்பென்றால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். அதுதான் நட்பு. ஆபத்து சமயத்தில் கைவிட்டுப் போனால் அதற்குப் பெயர் நட்பில்லை.

அதுசரி... இரண்டு பேரின் உயிருக்கும் ஆபத்தென்று வரும் போது எப்படித் தப்பிக் கொள்வது என்றுதானே பார்க்க முடியும்? என்று நீங்கள் நினைக்கலாம்.

அதுவும் நியாயம் தான்.

இருந்தாலும் இரண்டுபேரும் சேர்ந்து ஒரு சங்கடத்தை சுலபமாக சமாளிக்க முடியும் என்றால் அந்த நேரத்தில் கூட துணையாக இருப்பதை விட்டுவிட்டு தூர ஓடிப்போய் விட்டால் அது நன்றாக இருக்குமா?

சிலபேர் மிகவும் சாமர்த்தியத்துடன் நடந்து கொண்டு நண்பர்களைக் காப்பாற்றுவது உண்டு.

அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களிருவரும் ஆளுக்கொரு துப்பாக்கி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் கொண்டு காட்டுக்கு வேட்டையாடப் போனார்கள்.

ஏதாவது கண்ணில் படுகிறதா என்று அந்தக் காட்டில் தேடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயம் பார்த்து காட்டிலாகா அதிகாரிகள் ஜீப்பில் அந்தப் பக்கமாக வந்துவிட்டார்கள்.

அவ்வளவுதான்! அதைப் பார்த்ததும் இந்த இரண்டுபேரில் ஒருத்தன் வேகமாக ஓட ஆரம்பித்தான். இன்னொருத்தன் ஒன்றும் புரியாமல் அவ்விடத்திலேயே நின்றுவிட்டான். ஓடுபவனைப் பார்த்தும் அந்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

அவன் செடிகொடிகளுக்கிடையில் வளைந்து வளைந்து ஓடினான். இவர்களும் விடவில்லை. நீண்டதூரம் போய் ஓரிடத்தில் அவனைப் பிடித்தார்கள்.

அதிகாரி கோபமாக அவனைப் பார்த்தார்.

"ஏன் இப்படி பயந்துகொண்டு ஓடிவந்தாய்? எடு லைசன்ஸை" என்றார். அவன் மெதுவாக தன் பொக்கற்றில் கையை விட்டு எடுத்துக் காட்டினான்.

அதிகாரி அதை வாங்கிப் பார்த்தார். எல்லாம் சரியாக இருந்தது.

"உன்னிடம் தான் லைசன்ஸ் இருக்கிறதே, பின்னே எதற்காக ஓடிவந்தாய்?" என்று கேட்டார்.

"என் நண்பனிடம் லைசன்ஸ் இல்லையே!" என்றான்.

"அவனிடம் இல்லையென்றால் உனக்கென்ன? நீ ஏன் ஓடவேண்டும்?" என்று கேட்டார்.

"அவனை உங்களிடமிருந்து தப்பிக்க வைப்பதற்காகத்தான் நான் இவ்வளவு தூரம் ஓடிவந்தேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் மொழித்தினப்போட்டி வடமராட்சி வலய போட்டி முடிவுகள்

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் வடமராட்சி கல்வி வலய நிலைப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற மாணவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களை இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள எழுத்தாக்கப் போட்டியிலும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள தனி நிகழ்வுக்கும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள குழு நிகழ்வுகளுக்கும் பொருத்தமான வகையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**ஆக்கம் எழுத்து**

**பிரிவு-1**
ப.கோபிகா(மாணிக்கவாசகர் வித்தி.

**கட்டுரை வரைதல்**

**பிரிவு-2**
பா. சௌமியா (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை).

**பிரிவு -3**
கோ. மயூரி (மெதடிஸ்த பெ. உ. பா).

**பிரிவு - 4**
த. கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி).

**தமிழியற் கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும்**

**பிரிவு -5**
ஜெ. ஜெசிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பிரிவு 4**
கோ. தர்மிக்கா (வட இந்து மக. கல்)

**பிரிவு - 5**
ந. தயாளினி (விக்னேஸ்வராக் கல்)

**திறனாய்வுப் போட்டி**

**பிரிவு - 5**
த.நிருஜா(விக்னேஸ்வராக் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

**பிரிவு - 4**
இ. மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**
அ. கோகுலன் (நெல்லியடி ம.ம. வித்தி.

**கவிதை ஆக்கம்**

**பிரிவு - 4**
செ. சுகாங்கி (விக்னேஸ்வராக் கல்லூரி)

**பிரிவு - 5**
வெ. எழிலரசி (வட இந்து மக. கல்லூரி).

**சிறுகதை ஆக்கம்**

**பிரிவு - 4**
ஸ். மேரி நிசாந்தினி (குடத்தனை கரை அ.மி.த.க. பா).

**பிரிவு - 5**
இ. பிரியங்கா (மெதடிஸ்த பெ. உ. பா).

**வாசிப்பு**

**பிரிவு - 1**
சா. சிந்தியா (கற்கோவளம் மெ.மி. த.க. பா).

**பிரிவு - 2**
க. பவித்திரா (மெதடிஸ்த பெ.உ. பா).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**கதைகூறல்**

**பிரிவு - 1**
ஸ்ரீ. நிரோஜன் (மாணிக்கவாசகர் வித்தி.

**பேச்சு**

**பிரிவு - 1**
உ.வசீகரன்(தும்பசிட்டி மெ.மி.த.க.பா)

**பிரிவு - 2**
வ. சங்கீர்த்தனா (வட. மத்.மக. கல்லூரி).

**பிரிவு - 3**
மு. பாவலன் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 4**
உ. சங்கீதா (வட. இந்து மக. கல்லூரி).

**பிரிவு - 5**
த. தனுசன் (நெல்லியடி ம.ம. வித்தி.

**பாவோதல்**

**பிரிவு -1**
இ. மதுரா (மாணிக்கவாசகர் வித்தி.

**பிரிவு - 2**
வே. வினோத் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 3**
லி. விதுர்ஷா (நெல்லியடி ம.ம. வித்தி.

**பிரிவு - 4**
நி. சாமந்தி (நெல்லியடி ம.ம.வித்தி.

**பிரிவு - 5**
ச. சாயிஜெனனி (வட.மத்.மக. கல்லூரி).

**இசையும் அசைவும்**

**பிரிவு - 1**
சு. சுவர்ணா (பரு. சித்தி வி. வித்தி).

**இசை தனி**

**பிரிவு -2**
ஜெ. லாவண்யா (வட.மத். மக. கல்லூரி).

**பிரிவு - 3**
த. விஜிதரன் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 4**
சி. நிதர்சன் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 5**
ஜெ. ஹம்ஸவதி (வட. மத். மக. கல்லூரி

**இசைகுழு - I**

**பிரிவு - 1**
ஹாட்லிக் கல்லூரி.

**இசை குழு -II**

**பிரிவு - 2**
தொண்டைமானாறு வீ.ம. வித்தி

**நடனம் தனி**

**பிரிவு - 2**
த. அபிஷேகா (நெல்லியடி ம.ம. வித்தி.

**பிரிவு - 3**
நா. ரம்யா (மெதடிஸ்த பெ. உ. பா).

**பிரிவு - 4**
ச. துஷாரா (நெல்லியடி ம.ம.வித்தி.

**பிரிவு - 5**
வி. பிரியங்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நடனம் - குழு I**
மெதடிஸ்த பெ. உ.பா

**திறந்த போட்டி**

**நாட்டிய நாடகம் ஆடல் கதை**
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**நாட்டார் பாடல்**
(ஹாட்லிக் கல்லூரி)

**இலக்கிய நாடகம்**
(விக்னேஸ்வரக் கல்லூரி)

**வில்லுப்பாட்டு**
(வட இந்து மக. கல்லூரி)

**விவாதம்**
(நெல்லியடி ம.ம. வித்தி.

**தமிழறிவு வினாவிடை**
(விக்னேஸ்வரக் கல்லூரி)

**நாட்டுக்கூத்து**

**சிந்துநடை - பிரிவு 1**
(புலோலி மெ.மி.த.க. பா)

**இசை நாடகம் - பிரிவு - 2**
(மெதடிஸ்த பெ. உ. பா)

**விசேட கூத்து - பிரிவு - 3**
(வேலாயுதம் ம. வித்தி.

# இராசி பலன்

23-04-2010
(சித்திரை 10, வெள்ளிக்கிழமை)
நவமி காலை 6.49 மணிவரை
தசமி பின்னிரவு 4.23 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 12.06 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
சுபநேரம் 6.00-7.30 மணிவரை
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்.

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, காரிய இடையூறு, நண்பர்கள் சந்திப்பு, சுப நிகழ்வு. |
| இடபம் | தன்னம்பிக்கைக்குறைவு, பிரயாண சுகம், கூட்டு முயற்சி, சுபசெலவு. |
| மிதுனம் | போசன சுகம், நற்கீர்த்தி, சிந்தனை மிகுதி, தொழில் ஆர்வம். |
| கடகம் | போசன சுகக்குறைவு, ரோக நிலை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| சிங்கம் | தெய்வ தரிசனம், உறவினர் வருகை, வெகுமானம், போசன சுகம். |
| கன்னி | சோம்பல் நிலை, பிரயாண சுகம், பிறருக்கு உதவி செய்தல், தெய்வ சிந்தை. |
| துலாம் | குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, தெய்வ தரிசனம், போசன நன்மை. |
| விருச்சிகம் | தொழில் மேன்மை, தெய்வ தரிசனம், காரிய நன்மை, நல்ல வரவேற்பு. |
| தனுசு | வேலைச்சுமை, பிரயாணம், ரோக பயம், அஜீரணக் கோளாறு. |
| மகரம் | அபகீர்த்தி, வேலைச்சுமை, பிரயாண பயம், கடின முயற்சி. |
| கும்பம் | தெய்வ தரிசனம், போசன சுகம், தொழில் நன்மை, காரிய அனுகூலம். |
| மீனம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், உறவினர் சந்திப்பு, தெய்வ சிந்தை. |

வள்ளுவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 60 |
| தக்காளி | 50 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | .40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 50 |
| பாகற்காய் | 80 | 90 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 200 |
| போஞ்சி | 100 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# படகினுள் கடல்நீர் உட்புகுந்ததால் அவலத்துக்கு உள்ளாகிய பயணிகள்

(யாழ்ப்பாணம்)

புதுவருடப்பிறப்பிற்கு முதல் நாளன்று கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து 150 பயணிகள் மற்றும் அவர்களது புதுவருடப் பொதிகளுடன் அனலைதீவிற்கு புறப்பட்ட படகினுள் கடல் நீர் உட்புகுந்ததால் பயணிகள் பெரும் அவலத்துக்குள்ளான தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தெரியவருவதாவது, புதுவருடப்பிறப்புக்கு முதல் நாளன்று கண்ணகை அம்மன் இறங்குதுறையி லிருந்து அனலைதீவுக்கு புறப்பட்ட படகொன்று 150 இற்கு மேற்பட்ட பயணிகளையும் அவர்களுடைய புதுவருடப் பொதிகளையும் மோட்டார் வண்டிகளையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. புறப்பட்டு 30 நிமிடத்திற்கு பின் அதிக சுமை காரணமாக படகினுள் கடல்நீர் உட்புகுந்தது. இதனால் பயணிகள் அனை வரும் அவலக்குரல் எழுப்பினார்கள். பலர் கடலில் பாய்வதற்கு தயார் நிலையில் இருந்தனர். எனினும் பல மணித்தியாலங்களின் பின் ஒருவாறு படகு அனலைதீவுக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை குறித்த எண்ணிக்கையிலும் பார்க்க அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதித்தமையே இந்த அவலநிலை ஏற்பட்டமைக்கான காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

எனவே இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6)

# நியமனக் கடிதம் வழங்கல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்III பதவிக்கு நியமனம் பெற்றோருக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி பொ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (6-4)



இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் முதியவர்களிற்கான ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போது பிரதேசசெயலர் ஆர்.வரதீஸ்வரன் பயனாளிக்கு புத்தகத்தினை வழங்குவதையும், அருகில் சமூகசேவை உத்தியோகத்தர் சுரேந்திரா நிற்பதனையும் படத்தில் காணலாம். (படங்கள் :-டுசாந்தன்)

# நாட்டைத் துண்டாடும் நோக்கிலேயே த.தே.கூ. - மு. காங்கிரஸ் கூட்டணி

## எல்லாவல மேதானந்த தேரர்

(கொழும்பு)

நாட்டை துண்டாடும் நோக்கிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் கூட்டணி அமைத்துள்ளன.

எனவே சம்பந்தன், ஹக்கீம் கூட்டணியின் நிபந்தனைகளை அரசாங்கம் நிராகரிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

சுயநிர்ணய உரிமையும் வடகிழக்கு இணைப்பும் தமிழ் அரசியல்வாதிகளின் பிரச்சினைகளே தவிர சாதாரண தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. இலங்கையில் மற்றுமொரு பிரிவினைவாதத்தை அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸும் பாராளுமன்றில் ஒன்றிணைந்து செயற்படவும் நாட்டிற்கு ஒவ்வாத பல கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளன.

அவர்களின் ஒன்றிணைவு நாட்டை துண்டாடுவதாக அமையுமாயின் ஹெல உறுமயவும் இந்நாட்டு மக்களும் அதற்கு இடமளிக்கமாட்டார்கள்.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிபந்தனைகள் இன்றி ஒத்துழைப்பு வழங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் முன்வர வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தனிநாடு அல்ல.. ஏனைய மக்களுடன் சமாதானத்துடன் சிறந்த பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்துகொண்டு வாழ்வதேயாகும் என்றார். (6)

# உலகளாவிய கல்விக்கான செயற்பாட்டு வார இறுதித் தேசிய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இவ்வாண்டு உலகளாவிய கல்விக்கான செயற்பாட்டு வார இறுதி தேசிய நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 முதல் 5.30 மணிவரை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் , யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## வரலாறு பாட விரிவுரை

சாவகச்சேரி பிரதேச பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான வரலாறு பாட விரிவுரை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் பொது நூலகத்தில் நடத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் எஸ்.உதயசாந்தியினால் நடத்தப்படவுள்ள இவ் விரிவுரையில் வரலாற்றுத்துறை மாணவர்களைக் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-31)

# இலங்கையில் பெற்றோல் உற்பத்தி நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய சுற்றாடல் அதிகாரசபை இலங்கையில் பெற்றோல் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதனடிப்படையில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளைக் கொண்டு பெற்றோல் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இதன்முதற் கட்டப் பணிகளை யட்டியந்தோட்டை மற்றும் கேகாலை ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (6)


# பொருளியற் கல்லூரி BARATHY

A/L 2012

மீண்டும் புதிய பிரிவு

எமது மூன்று நிறுவனங்களிலும்

24.04.2010 சனி

நாளை ஆரம்பம் கலை, வர்த்தகப் பிரிவு

| பாடம் | பொருளியற் கல்லூரி | | BARATHY |
|---|---|---|---|
| | யாழ்.நகரில் | இணுவில் | சித்தன்கேணியில் |
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன், சுதாகரன் | மகேந்திரன், சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| புள்ளிவிபரவியல் | விக்னேஸ் | விக்னேஸ் | விக்னேஸ் |
| தமிழ் | சத்தியவேந்தன் | பாலா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ், தரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| நாடகம் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| அரசியல் | ஜெனா | கோகுலன் | கோகுலன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| விவசாய விஞ்ஞானம் | விக்கி | விக்கி | விக்கி |
| இலகுகணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் | ஐங்கரன் |
| மனைப்பொருளியல் | மஜிபன் | மஜிபன் | மஜிபன் |
| ICT | அம்பி | அம்பி | அம்பி |
| ஆங்கிலம் | நிஷாந்தன், ஜைஷன் | நிஷாந்தன், ஜைஷன் | நிஷாந்தன், ஜைஷன் |
| சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |

இதுவரையிலும் அனுமதி பெறாத மாணவர்கள் நாளை ஆரம்பமாகும் புதிய பிரிவிற்கு உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-143)


# ஐ.தே.முன்னணியிலிருந்து பிரிந்து தனித்து செயற்பட தொழிலாளர் தேசிய முன்னணி முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படப் போவதாக தொழிலாளர் தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

தொழிலாளர் தேசிய முன்னணி தலைவர் பி.திகாம்பரம் இந்த அறிவிப்பை நேற்று ஆரம்பமான 7 ஆவது நாடாளுமன்ற அமர்வின் போது வெளியிட்டார்.

தமிழ் மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெற்றுக் கொடுத்தமைக்காக தமக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றை தருவதாக ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்த போதும் தம்மை அவர் ஏமாற்றிவிட்டதாக திகாம்பரம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மனோ கணேசனுக்கு தேசியப் பட்டியலில் இடம் வழங்காமையும் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட துரோகச் செயல் என திகாம்பரம் தெரிவித்துள்ளார். (6)

# கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சி தலைவராக ஏ.எம்.ஜெமீல் ?

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் நியமிக்கப்பட விருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய இளைஞர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஆவார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, கட்சியின் வெற்றிக்காக ஜெமீல் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## 174 வது மைல்கல்

# மானிப்பாய்



ஒரு நாட்டின் ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில் புதியதோர் உயர்தர வர்க்கம் உருவாகுவதற்கு காரணமாக அமைகிறது. இதன் நிமிர்த்தம் 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வருகையின் காரணமாக கண்டி இராட்சியத்தின் சிங்கள அரசாட்சியின் பிடியானது உடரட உயர்குல பரம்பரைகளிடமிருந்து கைநழுவி பாஹதரெட்டிய கரையோர மக்களுக்கும் ஆட்சியில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது. பிரித்தானிய ஆட்சியின் போதே யாழ். குடாநாட்டின் “பெரியபுலத்தில்” தமிழ் செல்வந்தர்களான முதலியார் பரம்பரை மிகவும் துரித வளர்ச்சிகண்டது.


தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மிஷனின் ஆதிக்கம் மானிப்பாய் பிரதேசத்தில் மேலோங்க சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் வளர்ச்சியடைந்தது. அதேபோல் நம் தேசத்தின் தேசப்பற்றுள்ள தேசாபிமானிகள் வாழ்ந்த பூமியான மானிப்பாய் பல கல்விமான்களை நாட்டுக்கு உருவாக்கி தந்துள்ளது. பிற்காலத்தில் மானிப்பாயிலிருந்து தலைநகருக்கு குடிபெயர்ந்த தமிழ் செல்வந்தர்களில் பெரும்பாலானோர் கொழும்பு-07 கறுவாத் தோட்டத்தில் குடியேறினார்கள். நம் தேசத்திற்கு உன்னத மனிதர்களை பெற்றுத் தந்த மானிப்பாய் பிரதேசத்திற்கு இலங்கையின் முதற்தர வங்கியான கொமர்ஷல் வங்கி கிளையினை திறந்து வைத்து, விஷேட வங்கிச் சேவையினை வழங்குவதானது எமக்கும் கௌரவமாகும்.

**கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய் கிளை, இல. 244. & 246 யாழ். வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் 2010 ஏப்ரல் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.07 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அழைக்கிறோம்.**

தொலைபேசி (முகாமையாளர்) 021–2221841,
(பொது) 021–2221842, 021–2221843,
(ஃபக்ஸ்) 021– 2221844

COMMERCIAL BANK




யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் விநாயகன் மாணிக்கத்தின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டுவிழாவும் நேற்று கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விழாநாயகன் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி மு. திருநாவுக்கரசு வித்தியாலய மாணவி செல்வி சி. யமிலா ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி. இராஜலிங்கம் மணிவிழா மலரை வெளியிட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: என். குமார்)

# ஐ.தே.மு.தேர்தலில் தோல்வியடைந்தமை தொடர்பில் முழுமையான மீள்பார்வை அவசியம்

## ஜயலத் ஜயவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஏன் தோல்வியடைந்தது என்பது தொடர்பில் முழுமையானதொரு மீள்பார்வை செய்ய வேண்டியுள்ளதுடன் உடனடி மறுசீரமைப்புக்கு செல்ல வேண் டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நிவாரணம் மற்றும் மனித உரிமைகள் விடயம் தொடர்பான உதவிச் செயலாளர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, கட்ந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஏன் தோல்வியடைந்தது? பின்னடைவுக்கான காரணம் என்ன? என்பது தொடர்பில் கட்சிமட்டத்தில் முழுமையான மீள்பார்வை ஒன்றுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கட்சியின் கடந்தகால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயவேண்டும். தேர்தலில் கட்சிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தவேண்டும். கட்சியின் குறைபாடுகள் மற்றும் பலவீனம் தொடர்பில் ஆராய்ந்து குறுகிய காலத்தில் அவற்றை நீக்கிக் கொள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

மேலும் தற்போதைய நிலைமையில் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள். அனைவரும் மிகவும் ஒற்றுமையாக செயற்படவேண்டிய அவசியம் உள்ளது. முக்கியமாக தற்போதைய நிலைமையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒற்றுமையாக செயற்படாமல் இருப்பின் அது எமது கட்சியை மேலும் பின்னடைவுக்கு இட்டுச் சென்றுவிடும்.

எனவே கட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் மென்மேலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதுடன் கட்சியின் குறைபாடுகளை விரைவில் களைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண் டும். அதற்காக குறுகிய காலப்பகுதியில் நாம் கட்சியை சிறந்த முறையில் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். (6)

# ஐ.தே.க.துணைத்தலைவர் பதவியிலிருந்து ருக்மன் சேனாநாயக்க விலகினார்

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருக்மன் சேனாநாயக்க தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்காவின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் ருக்மனின் பெயர் உள்ளடக்கப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் அவருக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்படவில்லை.

தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்படாத காரணத்தினால் ருக்மன் சேனாநாயக்க பதவி விலகியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் பதவி விலகல் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (4-6)

# ஊடகவியலாளர் படுகொலை சம்பவங்களுக்கு தண்டனை வழங்கப்படாத நாடுகளின் வரிசையில் இலங்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்களுக்கு தண்டனை வழங்கப்படாத நாடுகளின் வரிசையில் இலங்கையின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்களுக்கு தண்டனை வழங்காத நாடுகளின் வரிசையில் ஈராக் முதனிலைவகிப்பதாக நியூயோர்க் மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தப் படும் நாடுகளின் வரிசையில் பிலிப்பைன்ஸும் சோமாலியாவும் முன்னிலை வகிக்கும் அதேவேளை ஊடகவியலாளர்களுக்கு எதிராக மோசமான வன்முறை இடம்பெறும் நாடுகளின் வரிசையில் ரஷ்யா மற்றும் மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் முன்னிலை வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இத் தாக்குதல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் வரையில் வன்முறைச் சம்பவங்கள் தொடரும் என ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பின் பணிப்பாளர் ஜோயல் சிமோன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளின் வரிசையில் காணப்படும் கொலம்பியா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளின் பெயர்கள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த நாடுகளில் தற்போது வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

2003 ஆம் ஆண்டு முதல் ஈராக்கில் 88 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப் பட்டுள்ள போதிலும் இதுவரையில் எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை.

இதேவேளை இலங்கையில் நடைபெற்ற சிவில் யுத்த காலத்தில் 10 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படவில்லை எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (4-6)

## தாதியர் கற்கை நெறியை

# 3 வருடமாக குறைக்க பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு தன்னிச்சையாக தீர்மானம்

## அரச தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் நடைமுறையிலுள்ள தாதியர் பட்டப்படிப்புக் கற்கை நெறியை 4 வருடத்திலிருந்து 3 வருடமாகக் குறைப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தன்னிச்சையாகத் தீர் மானித்துள்ளதாக அரச தாதியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது பாரதூரமான விளைவுகளை ஏற் படுத்தக்கூடிய தீர்மானமென அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குறிப்பிட்டார்.


இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆண்ணக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கவிடம் வினவிய போது இந்தத் தீர்மானம் தன்னிச்சையாக எடுக்கப்பட்டதல்லவெனக் கூறினார்.

4 வருட தாதியர் கற்கை நெறியை 3 வருடமாகக் குறைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (2-6)

# களம் பல கண்ட யாழ் கோட்டை

12

## றைக்ளோப் வன் ஹூன்ஸ்




வாயிற் சுவரின் மேல் மணிக்கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக்கப் பட்டிருந்த காண்டாமணி தேவாலய வழிபாட்டு நேரத்தையும் கால நேரத்தையும் ஒலியெழுப் பியறிவித்து வந்தது.

கோட்டைக்குள்ளிருந்த சதுரங்க வடிவத் தேவாலயம் குரீஸ் கேர்க் (Kurys Kerk) எனப்பட்டது. சமவளவான பக்கங்களைக் கொண்ட கிரேக்கச் சிலுவை(Greek Cross) வடிவினது. இக் கிரேக்கச் சிலுவை வடிவை குரீஸ்கேர்க் என்பர். கோட்டையின் தென் கிழக்குப் பகுதியில் இந்தத் தேவாலயம் அமைந் திருந்தது. வடக்கு வாயில் ஊடாகவும் தெற்கு வாயில் ஊடாகவும் ஆலயத்தினுள் பிரவே சிக்க முடியும். தேவாலயத்தினுள்ளே 1660 ஆம் ஆண்டுக்குரிய கல்லறைக் கற்களைக் காணலாம். ஆனால் பிரதான வாயிலில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட 1706 ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவால யம் அடெம் வன் டேர் டுயின்(Adam Van Der Duyn)என்ற கம்மாந்தர் காலத்தில் மார் டின்(Martin Leusekam) என்ற கட்டிடக் கலைஞரால் கட்டி முடிக்கப்பட்டது. இத் தேவா லயம் இருபாலையில் இதற்கென அரிவிக் கப்பட்ட செங்கற்களையும் பயன்படுத்தியது. இச் செங்கற்களுக்கு ஆயிரத்துக்கு மூன்ற ரைப் பணம் கொடுக்கப்பட்ட தென்பதும் குறிப் பிடத்தக்கது.

தேவாலயத்தில் இரு பாரிய மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை போர்த்துக் கேயர் காலத்தவை என்பது அவற்றில் பொறிக் கப்பட்டிருக்கும் N.S.Dos Milagres De Jaff napatao 1648 என்ற எழுத்துக்கள் சான்று பகருகின்றன.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட அற்புத மான யாழ்ப்பாணக் கோட்டை வாயிலில் ஒல் லாந்தர் கம்பனியைக் குறிக்கும் VOC என்ற எழுத்தோடு கூடிய யாழ்ப்பாணக் கம்மந்தோ ரின் ஆள்புலத்திற்குரிய கேடயச் சின்னம் Shield பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கேட யச் சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவான 'பனை மரம் வரையப்பட் டிருந்தது. இது இந்த ஆள் புலத்தின் சரியான குறியீடாக விளங்குவதை பதினேழாம் நூற் றாண்டில் இந்த மண்ணில் கால்பதித்து நிலை கொண்ட ஒல்லாந்தர் உணர்ந்திருந் தனர்.



யாழ்ப்பாணக்கோட்டை நிலவளவீட்டு வரைபு
(வில்சன் என்பவரின் வரைபு-1984)

### 21 ஜுன் 1658

ஒல்லாந்தத் தளபதி றைக்ளோப் வன் ஹூன்ஸ் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது அவனுக்கு வயது 39 ஆகும். 1619 ஆம் ஆண்டு பிறந்து றைக்ளோப் வன் ஹூன்ஸ் டச் கம்பனியில் உயர் பதவிகளை வகித்துள் ளான். கம்பீரமான நெடிய உருவத்தைக் கொண் டவன். சிறந்த போர் வீரன். அவனை அவனது சகாக்கள் உயரமான கப்ரின் எனவும் யாழ்ப் பாணச் சுதேசிகள் பெரிய ஒல்லாந்தேசு என வும் அழைத்துள்ளனர். 1662 ஆம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான கவன ராக நியமிக்கப்படும் வரை யாழ்ப்பாணப் பட் டினக் கோட்டையின் கம்மாந்தரமாக விளங் கியுள்ளான். இடையில் சில வருடங்கள் பத்தே வியாவிலிருந்து விட்டுத் திரும்பி இலங் கைக்கு வந்து 1675 வரை கவனராகக் கடமை யாற்றினான். பின்னர் தனது மகனிடம் பதவி யைக் கையளித்துவிட்டு பத்தேவியாவிற்குத் திரும்பினான்.

றைக்ளோப் வன் ஹூன் சினிடமிருந்து யாழ்ப்பாணக் கமாண்டரியின் ஆட்சிப் பொறுப்பை 1662 இல் லோரன்ஸ்பைல் (Laurens Pyl) என்பவன் ஏற்றான். றைக் ளோப்வன் ஹூன் வகுத்த திட்டப்படி யாழ்ப்பா ணக் கோட்டையை முழுமைப்படுத்திய தில் பைலிற்குப் பெரும் பங்குள்ளது. கண்டி மன்ன னால் 1660 ஏப்ரல் 4ஆம் திகதி கைதாகிய றொபேர்ட் நொக்ஸ் என்பவன் 19 வருடங்கள் சிறையில் வாடி, 1679 ஒக்டோபர் 18 ஆம் திகதி தப்பியோடி காடுகள், கிராமங்களுடாக அரிப்பு எனுமிடத்தை வந்தடைந்து ஒல்லாந்தரிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பரிதாபத்திற் குரிய றொபேட்நொக்சை கொழும்புக்கு அழைத் துச் சென்று பத்தேவியாவிற்கு அனுப்பிவைத் தவன் லோரன்ஸ் பைல் ஆவான்.

ஒல்லாந்தர் காலத்தில் அடிக்கடி யாழ்ப் பாணக் கோட்டைக்கு ஊழியம் (இராசகாரி யம்) செய்வதற்கு யாழ்ப்பாண மக்கள் சென்று வந்தனர். கோட்டையின் பொக்கிஷக்கார னுக்கு வரிகளாகக் சேர்கின்ற செப்புக்காசு களை எண்ணுவதற்கு கடைகளிலிருக்கும் சோனகர் சென்று வந்தனர். இவர்களோடு கடைகளில் வியாபாரம்செய்யும் செட்டிக் குளம் பரவர்களும் கோட்டைப் பொக்கிஷக்கார னுக்கு காசெண்ணுவதற்கு உதவி வந்தனர். சிவியார் என்போர் கம்மாந்தர், உயர் அதிகாரிகளின் பல்லக்கு காவிகளாகவும் கோட்டை வீடுகளுக் கும் பறங்கித் தெரு (சீதாரி- Pettah) வீடுக ளுக்கு நல்ல தண்ணீர் அள்ளி வழங்கும் ஊழி யத்தையும் செய்து வந்தனர். பள்ளிவிலிகள் என் போர் கோட்டைக்குள்ளிருந்த கோயி லையும் வீடுகளையும் சுத்தி செய்து வெள்ளை யடிக்கவும் கடமைப்பட்டிருந்தனர். பள்ளர் என்போர் மாதமொரு தடவை ஒல்லாந்தக் கம்பனி யானைகளுக்கு தென்னையோலை கொண்டுவந்து கோட்டைக்குள் சேர்த்தனர். அத்தோடு வலிகாமம் பிரிவிலுள்ள பள்ளர் என் போர் மாதத்தில் 3 முதல் 6 நாள் வரை கோட் டைக்குள் வந்து திரிகைகளில் வெடிமருந்து களை அரைத்துக் கொடுக்க வேண்டியவர் களாகவும் இருந்துள்ளனர். குதிரைகளுக்குப் புல் வழங்கும் கடமையும் இவர்களுடையதாக இருந்தது. சாண்டார் என்போர் கம்மாந்தர் கோட்டையிலிருந்து வெளியே புறப்படும் போது சாமான்களைச் சுமப்பவர்களாகவும் தீப்பந்தம் பிடிப்பவராகவும் விளங்கினர். வெற்றிலைக் காரர் என்போர் கோட்டைக் கம்மாந்தருடைய அடுக்களைக்கு முயல் வேட்டையாடிக் கொண்டு வந்து கொடுக்கும் ஊழியம் செய்தனர். கோட் டையில் வெள்ளாளரும் மடப்பள்ளியாரும் கம் மாந்தருடைய கணக்குப் பிள்ளைகளாக இருந் துள்ளனர். அரச ஊழியம் செய்யாது தவிர்க்கப் பட்டவர்கள் மாதம் தோறும் ஐந்து கூடை ஊமற்கரி சுட்டு ஒல்லாந்தக் கம்பனியின் கம் மாலைகளுக்கு வழங்க வேண்டியவர்களாக விருந்தனர்.

**செங்கை ஆழியான்**

ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக் கோட்டைக் குள் சர்வசாதாரணமாகச் சென்று வரக்கூடிய உரிமை வண்ணார் பண்ணைச் சிவன் கோயி லை (வண்ணை வைத்தீசுவரன் கோயில்) நீர் மாணித்த வைத்திலிங்கச் செட்டியாருக்கு இருந் தது. 1751 ஆம் ஆண்டு வைத்திலிங்கச் செட்டி யாருக்கு வயது நான்கு அழகும், கண் டோரைக் கவரும் கவர்ச்சியும் அவரிடமிருந்தன. தனது தந்தையார் கோபா லச் செட்டியாரின் கடை யில் இருந்தவேளை அங்கு கடைத் தெருவுக்கு வந்த கோட்டைக் கம்மாந்தரின் மனைவி அவரை அவரைக் கண்டு விருப்புற்று தன் வளர்ப்புப் பிள்ளையாக தத்தெடுத்துக் கொள்ள நேர்ந்தது. (தொடரும்)

---

## மட்டு. மீராவோடையில்

# துப்பாக்கி, கைக்குண்டு, தோட்டாக்களுடன் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடைப்பிரதேசத்தில் துப்பாக்கி ,கைக்குண்டு மற்றும் தோட்டாக்க ளுடன் ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை குழுவொன்று கடந்த செவ் வாய்க்கிழமை கைது செய்துள்ளது.

சந்தேக நபர்கள் முச்சக்கர வண்டி மற் றும் மோட்டார் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தனர். இவர்களை தடுத்து நிறுத்திய அதிரடிப்படையினர் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியை சோதனையிட்ட போது அதில் இருந்த ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர்.

ஒரு ரி-56 ரக துப்பாக்கி ,எட்டுத்தோட்டாக் கள், இரண்டு கைக்குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஓட்டமாவடி ,கதிரவெளி மற் றும் வாகரைப்பிரதேசங்களைச் சேர்ந்தவர் கள் என பொலிஸார் கூறியுள்ளனர். (6)

---

## ஐக்கிய தேசிய கட்சியில்

# இளம் மற்றும் திறமையுடையவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை

ஐக்கிய தேசியக்கட்சியின்மறுசீரமைப்புச் செயற்பாட்டில் இளம் மற்றும் திறமையுடைய வர்களுக்கு அதிகளவில் பொறுப்புக்களை யும் பதவிகளையும் வழங்குவதற்கு கட்சியின் தலைமைப்பீடம் ஆலோசித்து வருவதாக கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு இவ்வாரம் தனது தீர்மானங்களை எடுக்கவுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திறமை யான மற்றும் இளம் மக்கள் பிரதி நிதிகளுக்கு அதிகளவில் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் கட்சியை துரித கதியில் மறுசீரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரி வித்துள்ளனர். இது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட் டத்தில் பாராளுமன்றத்தில் தெரிவாகியுள்ள ரவி கருணாநாயக்க குறிப்பிடுகையில், ஐக்கிய தேசிய முன்னணி குறுகிய காலப் பகுதியில் மறுசீரமைப்பு செய்யப்படவேண் டும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள் ளப்பட்ட விடயமாகவுள்ளது. அதனடிப்படை யில் மறுசீரமைப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்கவிருக்கின்றோம்.

முக்கியமாக மறுசீரமைப்பு செயற்பாடு களின் போது இளம் மற்றும் திறமையுடை யவர்களுக்கு அதிகளவில் சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அவர்களுக்குப் பொறுப் புக்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பில் தற்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருவதுடன் விரைவில் இவ் விடயம் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும். இளைஞர், யுவதிகளுக்கு புதிய பதவிகளும் வழங்கப்படும் என்றார். (6)

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

04.ஒவ்வொன்றும் $m$ திணிவுடைய ஒரே மாதிரியான இரு கோளங்கள் $A, B$ என்பன $d$ தூரத்தில் கரடான கிடைத்தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. கோளங்களுக்கும் தரைக்கு மிடையேயான உராய்வுக் குணகம் $\mu$ ஆகும். கோளம் $A$ இற்கு கோளம் $B$ஐ மோதுமாறு வேகம் கொடுக்கப்படுகின்றது.

1. கோளம் B நிலையாக்கப்பட்டிருக்கும் போது $A$ ஆனது $B$ ஐ மோதி பின் அதன் ஆரம்பதானத்தில் ஓய்வுக்கு வருகின்றது. $A$ இன் ஆரம்பவேகம் $\frac{1}{e}\sqrt{2\mu gd(1+e^2)}$ எனக் காட்டுக.
2. கோளம் $B$ நிலையாக்கப்படவில்லை எனின், கோளம் $A$ ஆனது அதே வேகத்துடன் $B$ஐ நோக்கி எறியப்படின், மொத்தலின் பின்னர் அவ்விரு கோளங்களும் $d/e$ தூரத்தில் ஓய்வில் இருக்கும் எனக் காட்டுக . இங்கு $e$ கோளங்களுக்கு இடையான மீளமைவுக் குணகம் ஆகும்.

05.$m$ திணிவுடைய துணிக்கை ஒன்று $a$ நீளமுள்ள நீளா இழை ஒன்றின் ஒரு முனைக்கு இணைக்கப்பட்டுள்ளது. இழையின் மறுமுனை நிலையான புள்ளி $O$ இற்கு இணைக் கப்பட்டுள்ளது. துணிக்கை சமநிலையில் தொங்கும் போது அதற்கு $U$ என்னும் கிடைவேகம் கொடுக்கப்படுகின்றது. இழை கீழ் நோக்கிய நிலைக்குத்துடன் $\theta$ கோணத்தை ஆக்கும் போது அதன் வேகம் $V$உம், இழையிலுள்ள இழுவை $T$ உம் எனின்,

$V^2 = U^2 - 2ag + 2ag\cos\theta$ , $T = \frac{m}{a}\left(U^2 - 2ag + 3ag\cos\theta\right)$ எனக் காட்டுக.


1. $U^2 < 2ag$ எனின் துணிக்கையின் இயக்கம் ஓர் ஊசல் எனக் காட்டுக.
2. துணிக்கையின் வேகம் $\frac{U}{2}$ ஆயிருக்கும் போது இழை கீழ் நோக்கிய நிலைக்குத்துடன் ஆக்கும் கோணம் $2\sin^{-1}\left\{\frac{U}{4}\sqrt{\frac{3}{ag}}\right\}$ எனக் காட்டுக.

06. 1. விசைகள் $P, Q$ முறையே $BA, CA$ வழியே எழுத்துக்களின் ஒழுங்கு குறிக்கும் திசைக ளிலே தாக்குகின்றன. இதற்கு சமவலுவான விசைகளை $BAC$ இன் உள்ளிரு கூறாக்கி, வெளியிரு கூறாக்கி வெளியிரு கூறாக்கியின் திசைகளிலே காண்க. இங்கு $BAC=2a$

$A=90^0$ ஆகுமாறு ABC என்பது ஓர் இரு சம பக்க முக்கோணியாகும். BCD என்பது BC இன் மற்றைய பக்கத்தில் உள்ள சம பக்க முக்கோணியாகும். 3N, 2N 3N, 10N, 14N எனும் விசைகள் AB, BC, CA, BD, CD இன் வழியே எழுத்துக்களின் ஒழுங்கு குறிக்கும் திசைகளிலே தாக்குகின்றன. தொகுதியின் விளையுளில் தாக்கு கோடானது AB ஐ A $\frac{\sqrt{3}}{15}AB$ இல் தூரத்தில் சந்திக்கும் எனக் காட்டுக.

2.கிடையுடன் a சாய்விலுள்ள கரடான சாய்தளத்தில் ஓர் கோளம் வைக்கப்பட்டுள்ளது. கோளத்தின் மையத்தைக் கொண்டுள்ள நிலைக்குத்துத் தளத்தில், தளத்தின் அதியுயர் சாய்வுக்கோட்டில் கோளத்தின் மேற்பரப்பில் கோளத்தின் தொடலி திசையில், கோளத்தில் பிரயோகிக்கப்படும் ஓர் விசையினால் கோளம் சமநிலையில் பேணப்படுகின்றது. இவ்விசையின் திசையானது கிடையுடன் $\beta$ கோணத்தை ஆக்குகின்றது. இங்கு $\beta$ ஆனது $a$ இன் போக்கிலேயே உள்ளது. கோளத்திற்கும் தளத்திற்கும் இடையேயான உராய்வுக் குணகம் $\mu$ எனின் $\mu \geq \frac{\sin\alpha}{\cos\alpha + \cos\beta}$ எனக் காட்டுக.

07.





நான்கு லோசன கோல்கள் $AB, BC, CD, DB$ ஆல் ஆன சட்டப் படல் படத்தில் காட்டப்பட்டுள்ளது. அவை $B, C, D$, இல் சுயாதீனமாக பிணைக்கப்பட்டுள்ளன. இச் சட்டப்படலானது நிலைக்குத்தான சுவரில் A,Dஇல் பிணைக்கப்பட்டுள்ளது. C இல் 10Nசுமை ஏற்பட்டுள்ளது. சமநிலையில் $AB, DC$ கிடையாக உள்ளது. போவின் குறியீட்டைப் பயன்படுத்தி தகைப்பு வரிப்படத்தை வரைந்து கோல்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தகைப்புக்களைக் கண்டு அவற்றை இழுவை, உதைப்பு என வேறுபடுத்துக. இதில் இருந்து $A, D$ இலுள்ள மறுதாக்கங்களைக் காண்க.

2.ஒவ்வொன்றும் W நிறையுடைய ஒரே மாதிரியான இரு சீர்கோல்கள் $AB, BC$ என்பன $B$ இல் ஒப்பமாக பிணைக்கப்பட்டுள்ளன. நிலையாக்கப்பட்ட செவ்வட்ட உருளை ஒன்றின் மேல் $ABC=90^0$ ஆகுமாறு கோல்கள் சமநிலையில் உள்ளன$ABC$ இன் தளம் உருளையின் அச்சுக்கு செங்குத்தாகவும் உருளையின் அச்சு கிடையாகவும் உள்ளது. மூட்டு $B$ இல் மறுதாக்கத்தைக் காண்க. அத்துடன் கோல்கள் ஒவ்வொன்றினதும் நீளம் உருளை ஆரையின் இரு மடங்கு எனவும் காட்டுக.

08.சீரான தடிப்புடைய பொள்ளரைக் கோளம் ஒன்றின் உள்ளாரை வெளியாரைகள் முறையே $b, a$ஆகும். இவ்வுடலின் ஈர்ப்புமையம் அதன் மையத்திலிருந்து $\frac{3(a^4-b^4)}{8(a^3-b^3)}$ என தொகையீட்டைப் பயன்படுத்திக் காட்டுக.

இப் பொள்ளரைக் கோளத்துடன் ,$a$ ஆரையும் $h$ உயரமும் உடைய செவ்வட்ட, திண்மக் கூம்பு ஒன்று தட்டையான பரப்புக்கள் பொருந்தும் வண்ணம் ஒட்டப்பட்டுள்ளது. இக் கூட்டு உடலானது , அதன் கோளப்பரப்பு ,ஒப்பமான கிடைமேசை மீது இருக்குமாறு வைக்கப்பட்டுள்ளது. கோள மேற்பரப்பின் எப்புள்ளி பற்றியும் இவ்வுடலானது சம நிலையில் இருப்பின் $h=\sqrt{\frac{3(a^4-b^4)}{a}}$ எனக் காட்டுக.




($h$ உயரமுள்ள திண்மக் கூம்பின் ஈர்ப்பு மையமானது அதன் அச்சின் வழியே அதன் அடியில் இருந்து $\frac{h}{4}$ தூரத்தில் இருக்கும்)

### பகுதி A

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. இரண்டு விசைகளின் கூட்டுத்தொகை 18N ஆகும். அவற்றின் விளையுள் 12N ஆனது சிறிய விசைக்கு செங்குத்தாகும். சிறிய விசையைக் காண்க.

2. ஓர் இலேசான இழை ABCD இரு நிலைத்த புள்ளிகள்A,D யிற்கு இணைக்கப்பட்டுள் ளன. B யில் 12 kg திணிவும் Cயில் mkg திணிவும் இணைக்கப்பட்டுள்ளன. AB கிடை யுடன் $60^\circ$ சாய்விலும் B C கிடையாகவும் C D கிடையுடன் $30^\circ$ சாய்விலும் இருக்கும் போது தொகுதி சமநிலையில் இருப்பின் m=4 எனக் காட்டுக.

3. ஒரு துணிக்கை நேர்கோடொன்றில் x தூரத்தை $t$ செக்கன்களில் பயணம் செய்கிறது. இத் துணிக்கையானது ஓய்விலிருந்து புறப்பட்டு ஓய்விற்கு வரும்போது அது தன் இயக்கத்தின் முதற்பகுதியை மாறா ஆர்முடுகல் $a$ உடனும் இரண்டாவது பகுதியை மாறா அமர்முடுகல் $f$ உடனும் சென்றது. துணிக்கையின் இயக்கத்துக்கான வேக-நேர வரைபை வரைக.

   இதிலிருந்தோ அல்லது வேறுவிதமாகவோ $t=\sqrt{\frac{2x(a+f)}{fa}}$ எனக் காட்டுக

4. $h$ உயரத்திலிருந்து புவியீர்ப்பின் கீழ் ஓய்விலிருந்து விழவிடப்படும் துணிக்கையொன்று தனது இயக்கத்தின் இறுதிச் செக்கனில் $\frac{9h}{25}$ ஐக் கடக்கின்றது. $h$ இன் பெறுமானத்தைக் காண்க ($g = 10ms^{-2}$ எனக் கொள்க)

5. இணைகரம்ABCD யின் எதிர்ப்பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைக்கும் கோடுகள் Eயில் இடைவெட்டுகின்றன. O என்பது இணைகரத்தின் தளத்தில் உள்ள ஏதாவதொரு புள்ளியாகும் $\overline{OA} + \overline{OB} + \overline{OC} + \overline{OD} = 4\overline{OE}$ எனக் காட்டுக.

### பகுதி -B

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

6.a) லாமியின் தேற்றத்தைக் கூறுக.

நிலைக்குத்துத் தளத்தில் விறைப்பாக இறுக்கப்பட்டுள்ள ஒரு ஒப்பமான வட்ட கம்பியின் பாரமான Wநிறையுடைய மணியொன்று சுயாதீனமாக வழுங்கக்கூடியது. மணியுடன் தொடுக் கப்பட்டுள்ள இலேசான இழையொன்று கம்பியின் அதியுயர் புள்ளிக்கு கட்டப்பட்டு மணி சம நிலைக்கு வரும் போது இழை இறுகிய நிலையில் நிலைக்குத்துடன் $\theta$கோணத்தை அமைக் கிறது.

பின்வருவனவற்றைக் காண்க.

1. இழையிலுள்ள இழுவை
2. மணியின் மீது கம்பயின் மறுதாக்கம்

b. ABCD என்பது 2 $l$ பக்கமுள்ள ஒரு சதுரமாகும். AB, BC, DC, AC, BD வழியே பக் கங்களின் ஒழுங்கு குறிப்பிடும் திசைகளில் முறையே F,2F,aF, $3\sqrt{2}F$ , $\sqrt{2}bF$ , பருமனுள்ள விசைகள் தாக்கு கின்றன. ABCD யின் தளத்திற்கு செங்குத்தாக A க்கூடான அச்சுபற்றி DCB போக்கில் விளையுள் முறுக்குதிறனின் பருமன் 4 F$l$உம் விசைகளின் விளையுளின் பருமன் 10F உம் எனின் a யையும்b யையும் காண்க.

7. a யும்b யும் இரண்டு பூச்சியமற்ற காவிகளாகும். எண்ணிப்பெருக்கத்தை வரையறுக்க. a யும் bயும் இரண்டு அலகுக்காவிகளாகவும்$\theta$ என்பது அவற்றிற்கிடைப்பட்ட கோணமாகவும் , இருப்பின் $\sin\frac{\theta}{2} = \frac{1}{2}|a-b|$ எனக் காட்டுக.

b) ABCஎன்பது Bயில் செங்கோணமுள்ள ஒரு செங்கோண முக்கோணியாகும். காவி முறைமூலம் , $AC^2 = AB^2 + BC^2$ எனக் காட்டுக.

c) $\underline{a} = 2\underline{i}+3\underline{j}-\underline{k},\ \underline{b} = \underline{i}-\underline{j},\ \underline{c} = \underline{i}-2\underline{j}+\underline{k}$ எனின் $\underline{c}.(\underline{a}\times\underline{b})$ யைக் காண்க.

8.a Oஎன்ற புள்ளியிலிருந்து புவியீர்ப்பின் கீழ் இயங்கும் ஒரு துணிக்கையின் தொடக்க வேகத்தின் கிடை , நிலைக்குத்துக் கூறுகள் முறையே u,v ஆகும். OX,OY என்பன முறையே கிடை , மேல்முக நிலைக்குத்து அச்சுக்கள் ஆகும். அத் துணிக்கை கிடையாக $x$ தூரம் சென்றபோது அது அடைந்த நிலைக்குத்து உயரம் $y=\left(\frac{v}{u}\right)x-\left(\frac{g}{2u^2}\right)x^2$ எனக் காட்டுக.

b). Oவிலிருந்து வெளியேறும் நீர்த்தாரையொன்று 6 m தூரத்திலுள்ள திரையொன்றை O விற்கு மேலே 4m உயரத்தில் அடிக்கிறது. திரையை மேலும் 4m தூரம்Oவிற்கு அப்பால் நகர்த் திய போது நீர்த்தாரை மீண்டும் அதே புள்ளியில் அடிக்கிறது. நீர்த்தாரையின் பாதையை பரவளைவுப் பாதை எனக் கருதி நீர்த்தாரையின் எறியக்கோணம் $\tan^{-1}\left(\frac{16}{15}\right)$ எனக் காட்டுக.

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

## பௌதிகவியல்-I Physics-I

*2 மணித்தியாலங்கள்* *2Hours*

முக்கியம் :- ♦ இவ்வினாத்தாள் 10 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
♦ எலலா வினாக்களுக்கும் விடை எழுதுக.
♦ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
♦ 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3),(4), (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து அதனை விடைத்தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிக்க.

*கணிப்பானைப் பயன்படுத்தலாகாது*


**($g=10\ N\ kg^{-1}$)**


01. $v = u\left(1+\frac{at}{k^2}\right)$ எனும் சமன்பாட்டில் $v, u$ வேகம் , $a$-ஆர்முடுகல் , $t$-நேரம்.
மாறிலி $k$ இன் அலகு ,
1) $ms^{-1}$ 2) $m^{-1}s$ 3) $\sqrt{m^{-1}s}$ 4) $\sqrt{ms^{-1}}$ 5) $m$

02. மின்புலச் செறிவு $1\ NC^{-1}$ இற்கு சமனானது ,
1) $1kgA^{-1}$ 2) $1Vm^{-1}$ 3) $1cm^{-1}$ 4) $1As^{-1}$ 5) $1Am^{-3}$


03. கிடையுடன் $60^{\circ}$ உடன் மேல் நோக்கி எறியப்பட்ட துணிக்கையின் ஆரம்ப இயக்க சக்தி E ஆகும். அதியுயர் புள்ளியில் அதன் இயக்க சக்தி ,
1) $E$ 2) $\frac{E}{2}$ 3) $\frac{E}{4}$ 4) $\frac{3E}{4}$ 5) 0

04. P,Q எனும் இரு துணிக்கைகள் காட்டப்பட்டவாறு ஒன்றுக் கொன்று செங்குத்தான திசைகளில் சம கதியுடன் அசைகின்றது . P சார்பாக Q இன் வேகத்தில் திசை,








05. சம திணிவுடைய P,Q எனும் இரு துணிக்கைகள் 3m நீளமுடைய இலேசான நீட்டமுடியாத இழையில் கட்டப்பட்டு, இழையின் ஒரு நுனி காட்டப்பட்டவாறு கிடையான வட்டத்தட்டின் மையம் O இல் இணைக்கப்பட்டுள் ளது. தட்டு சீரான கோணவேகத்துடன் சுழல்கின்றது.
$\frac{P,Q \text{ பகுதியில் தொழிற்படும் இழுவை}}{P,Q \text{ பகுதியில் தொழிற்படும் இழுவை}}$ என்ற விகிதம்




1) $\frac{3}{4}$ 2) $\frac{3}{2}$ 3) $\frac{1}{4}$ 4) $\frac{2}{3}$ 5) $\frac{4}{3}$


06. பொருளொன்றில் தொழிற்படும் விசை F நேரம் t உடன் மாறலை வரைபு காட்டுகின்றது. நேரம் 2S இல் காட்டப்படும் சராசரி விசை,





1) 100N 2) 150 N 3) 200N 4) 75N 5) 500N

07. படகொன்றின் திணிவு 400kg ஆகும். 10% நீரில் அமிழ்ந்து மிதக்கின்றது. படகில் கொண்டு செல்லத்தக்க உயர் திணிவு,
1) 4000kg 2) 3600kg 3) 800kg
4) 4400kg 5) 9800kg

08. புகையிரதமொன்றின் வேகம் (V)-நேரம் (t) உடன் மாறலை உருகாட்டுகின்றது. ஆர்முடுகல்(a) -நேரம் (t) உடன் மாறலைக் காட்டுவதற்கான சரியான வரைபு,





09. 100g திணிவுடைய துப்பாக்கி ரவை $200ms^{-1}$ வேகத்துடன் சென்று இலக்கொன்றை செங்குத்தாக மோதி ஓய்வடைகின்றது. இலக்கில் துப்பாக்கி ரவை போதும் வீதம் $50s^{-1}$ ஆகும். இலக்கின் மீது தொழிற்படும் சராசரி விசை,
1) 24N 2) 2.4 kN 3) 1 kN 4) 1.2kN 5) 10kN

10. விமானத்திலிருந்து விழ விடப்பட்ட குண்டு ஆகாயத்தில் வெடிக்கின்றது. வெடித்தபின்,
A) முழு சக்தியும் அதிகரிக்கும்.
B) முழு இயக்க சக்தி அதிகரிக்கும்.
C) முழு உந்தமும் அதிகரிக்கும்.
உண்மையானது / உண்மையானவை,
1) A 2) B 3) A,B 4) B,C
5) A,B,C எல்லாம்

11. ஒரு தள ஐந்து விசைகள் காட்டப்பட்டவாறு இணைகரமொன்றின் பக்கங்களில் குறிக்கப் பட்டுள்ளது. இவ் விசைகளின் விளையுள் விசை யின் பருமன்,





1) 2a 2) 36a 3) 24a
4) 8a 5) 0

12. 20cm உயரமுடைய பாத்திரத்தில் H உயரத்திற்கு நீர் நிரப்பப்பட்டு மேலிருந்து பார்க்கும் போது தோன்றும் பாத்திரத்தின் $\frac{3}{4}$ பங்கு, நீர் நிரம்பியுள்ளது போல் தோன்றுகின்றது. H இன் பெறுமானம்,
(நீரின் முறிவுச்சுட்டி = $\frac{4}{3}$)
1. 10cm 2) 12cm 3) 15cm 4) 16cm 4) 20cm

13. பனிபடு நிலை பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A) பனிபடுநிலைக்கு வரும் சூழலில் நீராவி நிரம்பல் அடைந்திருக்கும்
B) அறை வெப்பநிலையிலும் பார்க்க பனிபடுநிலை எப்போதும்குறைவாக இருக்கும்.
C) பனிபடுநிலையில் மாத்திரமே சார் ஈரப்பதன் 100% ஆகும்.
உண்மையானது / உண்மையானவை,
1) A 2) B 3) A,B 4) A,B,C எல்லாம்
5) A,B,C யாவும் உண்மையற்றது.


14. காட்டப்பட்டுள்ளவாறு குழிவு வில்லையில் ஒருங்கும் ஒளிக்கதிர் படுகின்றது. இதனால் உருவாகும் விம்பம்,




1) மெய்யானதும், வில்லையை அகற்றும்போ உள்ள செறிவிலும் மிகவும் குறைவாகும்.
2) மெய்யானதும், வில்லையை அகற்றும்போது உள்ள செறிவிலும் மிகவும் உயர்வாகும்.
3) மாயமானதும், வில்லையை அகற்றும்போது உள்ள செறிவிலும் மிகவும் குறைவாகும்.
4) மாயமானதும், வில்லையை அகற்றும்போது உள்ள செறிவிலும் மிகவும் பெரிதாகும்.
5) மெய்யானதும், வில்லையை அகற்றும்போது உள்ள செறிவிற்கு சமனாகும்.

15. மூடிய பாத்திரத்தில் $0^{0}C$ உள்ள வாயுவை சமவெப்பு மாற்றத்தின் கீழ் கனவளவு இரு மடங்காக்கப்படுகின்றது. பின் வாயுவின் கனவளவை மாறாது வைத்து அமுக்கம் ஆரம்ப நிலைக்கு வரும் வரை வெப்பமமேற்றப்படுகின்றது. தற்போது பாத்திரத்தினுள் வாயுவின் வெப்பநிலை.
1) $273^{0}C$ 2) $2 \times 273^{0}C$
3) $3 \times 273^{0}C$ 4) $3 \times 273^{0}C$ 5) $5 \times 273^{0}C$

16. ஒரே திரவியத்தினால் செய்யப்பட்ட சர்வசமனான இரு கம்பிகள் T வடிவமாக உருவாக்கப்பட்டுள்ளது. கம்பி காவலிடப்பட்டிருப்பின் உறுதி நிலையில் சந்தி C இல் வெப்பநிலை,




1) $80^{0}C$ 2) $20^{0}C$ 3) $30^{0}C$
4) $40^{0}C$ 5) $50^{0}C$

17. கலோரிமானியில் அறை வெப்பநிலை $30^{0}C$ இல் நீர் உள்ளது. கலோரிமானியும் நீரும் $25^{0}C$ இற்கு குளிராக்கப்பட்டு $45^{0}C$ வெப்பறநிலையில் உள்ளதும் வெப்பக் கொள்ளளவு $1000J^{0}C^{-1}$ உடைய பொருளொன்றை போட்டபோது இறுதி வெப்பநிலை $35^{0}C$ ஆகியது. நீரும் கலோரி மானியும் அறைவெப்பநிலையில் இருக்கும் போது அப்பொருள் $50^{0}C$ இற்கு வெப்பமேற்றப்பட்டு கலோரிமானியில் போடப்பட்ட போது வெப்ப விரயம் 4000J எனின், கலவையின் உயர் வெப்ப நிலை.
1. $35^{0}C$ 2. $38^{0}C$ 3. $39^{0}C$ 4. $44^{0}C$ 5. $45^{0}C$

18. mkg திணிவை இலேசான சுருள் வில்லில் கட்டி அலைய விடப்படும் போது 80S இல் 20 அலைவுகளை ஏற்படுத்துகின்றது. திணிவை 2 kg இனால் அதிகரிக்கப்படும் போது அலைவு காலம் 2S அல் அதிகரிக்கப்படுமாயின் $m$ இன் பெறுமானம்.
1. $\frac{8}{5}$ kg 2. $\frac{6}{5}$ kg 3. $\frac{3}{2}$ kg 4. $\frac{5}{8}$ kg 5. $\frac{9}{4}$ kg

19. ஊடகமொன்றில் விருத்தி அலை இயக்கத்தின் போது
A) ஊடகத்தில் எல்லாத் துணிக்கைகளும் ஒரே ஆவர்த்தன, காலத்தை கொண்டிருக்கும்
B) ஒவ்வொரு துணிக்கையினதும் இடப்பெயர்ச்சி அவத்தை சமனாகும்
C) ஊடகத்தில் நிலையாக ஓய்விலுள்ள புள்ளியும், உயர் வீச்சம் உள்ள புள்ளியும் இருக்கும்
மேலுள்ள கூற்றுக்களில் உண்மையற்றது.
1. A 2. B,C 3. B 4. C 5. A,B,C

20. ஊடகம் P இல் இயங்கும் அலையின் அலை நீளம் 2m உம் கதி $8ms^{-1}$ உம் ஆகும் இவ் அலை ஊடகம் Q இற்கு செல்கின்றது. Q இல் அலை நீளமும், கதியும் முறையே (P சார் பாக Q இன் முறிவுச்சுட்டி =1.6)
1. $2m, 5ms^{-1}$ 2. $3.2m, 12.8ms^{-1}$ 3. $1.25m, 8ms^{-1}$
4. $1.25m, 5ms^{-1}$ 5. $5m, 1.25ms^{-1}$

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?



## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

**எந்த விதத்திலும் முன்னேறி இலட்சியத்தை நிறைவேற்றும் வாழ்க்கையாக தமது வாழ்க்கை அமைய வேண்டுமென்று விரும்பும் உங்களுக்கு இந்த விகிர்தி வெற்றிச் செய்திகளை ஏராளம் அள்ளித்தரப் போகிறது.**

கோதண்ட ராகு உங்களுக்கு கோடி கோடியாய் கொடுப்பார். சப்தம கேது உங் களுக்கு சாமி துணையை சாதகமாக்குவார். வருட தொடக்கத்திலேயே சனி வக்ரம் பெற்றாலும் பத்தில் அல்லவா சஞ்சரிக்கிறார்? கேந்திராதிபத்ய யோகத்தோடு விகிர்தி பிறப்பதால், வாழ்ந்த காலத்தை விட வரும் காலம் வரலாற்று சிறப்புமிக்க காலமாக அமையப் போகிறது.

சித்திரை 19 ஆம் திகதி குருப்பெயர்ச்சிக்கு பிறகு நான்காமிடம் புனிதமடைவதால், வீடு வாங்கும் கனவு நிறைவேறும். பிறரின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளிலும் வெற்றி பெறுவீர்கள்.

போற்றும் வாழ்க்கை அமையவும், புது முயற்சிகளில் பலன் கிடைக்கவும், யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் குருச்சேத்திரங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

ஏதேனும் ஒரு இலட்சியத்தை இளம் வயது முதலே மனதில் பதித்து வைத்திருப்பவர்கள் நீங்கள். அந்த இலட்சியம் நிறைவேறும் வரை அயராது பாடுபடுவீர்கள்.

உறவு, பகை பாராமல் உதவுபவர்கள் நீங்கள் தான். இனிய மாற்றங்களும் உங்களுக்கு வாழ்வில் வரும். ஏமாற்றங்களும் உங்களுக்கு வாழ்வில் வரும்.

இராகு - கேதுக்களுக்குரிய ஸ்தலங்களில் நட்சத்திர பலம் பெற்ற நாளில் பதினொரு அர்ச்சனைகள் செய்து, பதினாறு முறை வலம் வந்தால் பதினாறு பேறுகளும் உங்களுக்குக் கிடைக்கும்.

குருவின் பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்பதை அறிந்து கொள்ளலாம். இராசிநாதனாகவும், நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பகவான் பார்க்கும் இடங்களில் எல்லாம் யோகங்கள் ஏற்படும்.

குரு மற்றும் சனியின் பலத்தைப் பொறுத்தே நீங்கள் செயல்பட வேண்டும். தனுசு ராசிக்கு தாரம் அமைவது அரிது என்பார்கள். எனவே பொருத்தம் பார்த்து செய்தால்தான் பொருத்தமான வாழ்க்கைத்துணை அமையும்.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து பார்த்து அதன் பாதாசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள இயலும்.

உங்கள் ராசிக்கு 2,3 க்கு அதிபதியான சனி பகவான், ஆண்டின் தொடக்கத்தில் பத்தாமிடத்தில் வக்ரகதியில் இயங்குகிறார். மூன்றாமிடத்திற்கு அதிபதியாக இருப்பதால் வக்ரம் பெறுவது நன்மைதான். அதேசமயம் சனி உங்களுக்கு யோகம் செய்யும் கிரகம் என்பதால் தொழிலுக்கு போதிய மூலதனத்தை எதிர்பார்த்து காத்திருந்த உங்களுக்கு கேட்கும் இடத்தில் தொகை கிடைக்கப் போகிறது. தொழிலை விரிவு செய்து தொகை வரவைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குடும்பத்தில் சுபச்செலவுகள் உருவாகும். குழந்தைகளின் எதிர்காலத் தேவைகளை முன்னிட்டுத் தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கிச் சேர்ப்பீர்கள். குழந்தைகளின் படிப்புச் செலவை முன்னிட்டு வங்கி, அஞ்சலகம் போன்றவற்றில் சேமிப்புகளை உருவாக்கிக் கொள்வீர்கள்.

விகிர்தி தொடக்க நாளில் அஷ்டமாதிபதி நான்கில் சஞ்சரிப்பதால் பதவி, புகழ், கீர்த்தி, இலாபம், யோகம் அனைத்தும் ஏற்பட்டாலும் இடையிடையே மனக்கசப்பு தரும் பிரச்சினைகளும் உருவாகலாம்.

அந்தந்த நேரங்களில் சுய ஜாதகப்படி தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளைத் தேர்ந்தெடுத்து தித்திப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

3 ஆம் இடமான கும்ப ராசியில் சஞ்சரித்து வந்த குரு நான்காம் இடமான மீன ராசியில் சஞ்சரிக்கும் பொழுது பயண வாய்ப்புகள் கைகூடும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் பெருகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

தாய்வழி ஆதரவோடு தொழில் ஒன்றைத் தொடங்க முன்வருவீர்கள். அஞ்சல் வழி அனுகூலச் செய்தியும், தொலைபேசி வழித் தகவலும் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். வாங்கிய இடத்தை விற்றுவிட்டுப் புதிய இடம் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். ஒரு சிலர் கட்டிய வீட்டை விற்று விட்டு, கடன் சுமை குறையப் புதிய வீட்டை வாங்கிக் குடியேறுவர்.

**மன்னவன் நான்கில் நிற்க மனையினில் மகிழ்ச்சி தங்கும்! பொன்னோடும் பொருட்கள் சேரும்! பூமியால் யோகம் வாய்க்கும்! கண்ணான தொழில் தொடங்கி கைநிறைய இலாபம் பார்ப்பர்! பொன்னான குருவை நாளும் போற்றினால் பலன் கிடைக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் குரு நான்கில் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பலம் 8, 10,12 ஆகிய இடங்களில் பதிவதால் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரியத் தொடங்குவீர்கள்.

இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் எதிர்பாராத தனலாபம் வந்து சேரும். உழைப்பிற்கேற்ப பலன் கிடைக்கும். தொழில் வளம் பெருக எடுத்த முயற்சிகள் கைகூடும். பழைய தொழிலை அப்படியே விட்டு விட்டு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

விரயங்கள் உருவாகும் விதத்தில் குரு சஞ்சரிப்பதால் மாடு, மனை, பொன் ,பொருள் என்று எதையாவது ஒன்றை வாங்கி விரயமாக்கிக் கொள்ள முன் வருவீர்கள்.

சனி உங்கள் இராசியைப் பொறுத்தவரை தனாதிபதியாக விளங்குகிறார். மேலும் வெற்றிகள் ஸ்தானாதிபதியாகவும் கூடுதல் பொறுப்பை ஏற்கிறார்.அப்படிப்பட்ட சனி பகவான் செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது இதுவரை நடக்காத காரியங்களை நடத்திக் காட்டுவார்.

அலுவலகப் பணிகளில் இருந்த தேக்க நிலை மாறும்.தெய்வத் திருப்பணிகளுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள். விலகிச் சென்ற வாடிக்கையாளர்கள் விரும்பி வந்து சேர்வர். வியாபார நலன் கருதி புதிய இடத்தை வாங்கி அதில் நண்பர்களின் கூட்டோடு நல்ல தொழில் ஒன்றை செய்ய முன்வருவீர்கள்.யோக எண்ணின் ஆதிக்கத்தில் தொழில் நிலையத்தின் பெயரை அமைத்துக் கொண்டால் இலாபம் இருமடங்காக வந்து சேரும்.

வருடத் தொடக்கம் முதல் வைகாசி 12 வரை சனி வக்ரம் பெறுகிறார். மீண்டும் தை 8 ஆம் திகதி முதல் பங்குனி 30 ஆம் திகதி வரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இக்காலத்தில் சரளமான பணப்புழக்கத்தில் சற்று மாறுதல் ஏற்படலாம். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பதவி கிடைக்கலாம்.

பொதுவாக விரயாதிபதி உச்சம் பெறும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது.ஒரு காரியத்தை இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். தேவையற்ற விரயங்களும், தெளிவில்லாத சிந்தனையும் உருவாகும்.

அதுபோன்ற காலம் தான் மார்கழி 22 ஆம் திகதி முதல் தை 29 வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறும் நேரம். எனவே, அக்காலத்தில் அங்காரக வழிபாடும், முருகப் பெருமான் வழிபாடும் செய்வது நல்லது.

சித்திரை மாதம் 19 ஆம் திகதி(2.5.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆம்திகதி(6.11.2010) வரை மீனராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார்.ஐப்பசி 21 ஆம் திகதி (7.11. 2010) முதல் கார்த்திகை 4 ஆம் திகதி (20.11.2010) வரை கும்பராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார்.

கார்த்திகை 5 ஆம் திகதி மீண்டும் மீன ராசியில் முறையாகச் சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பொன்னான குருவின் சஞ்சாரம் என்னென்ன மாற்றங்களை வழங்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் 3 இல் சஞ்சரிக்கும் குரு 7,9,11 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும்.

விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்து சேர்வர். தந்தை வழியில் தகுந்த ஒத்துழைப்புக் கிடைக்கும்.கூட்டாளிகள் பிரிந்து சென்றாலும் புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

சகோதரர் வழியில் ஏற்பட்ட நீண்டநாள் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

வியாழக்கிழமை தோறும் குரு தெட்சிணா மூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

விகிர்தி ஆண்டில் குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்பை சில சமயங்களில் தளர்த்திக் கொள்வீர்கள். வருமானம் திருப்தி தரும்.

### சிவல்புரி சிங்காரம்

குழந்தைகளை அனுசரித்துச்செல்வது நல்லது.

கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.தை மாதத்திற்கு மேல் எதிர்பார்த்த காரியம் கைகூடும்.மாசி, பங்குனியில் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும் வாய்ப்பு உண்டு. வேலை தேடும் பெண்களுக்கு நல்ல உத்தியோகம் வாய்க்கும்.

குரு நான்காமிடத்தில் சஞ்சரிப்பதால் தாய்வழி ஆதரவு பெருகும். ஜென்ம இராகுவும் சப்தம கேதுவும் நன்மை தர முறையாக இராகு-கேதுக்களுக்கு ப்ரீதி செய்து கொள்வது நல்லது. (தொடரும்)

---

**ஐ.தே.க.வுடன் முறுகல் நிலை;**

# மனோகணேசன் ஆளுங்கட்சியுடன் இணையும் சாத்தியக்கூறு?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்து மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி ஆளும் கட்சியுடன் இணையும் சாத்தியக்கூறுகள் எழுந்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான கூட்டணியுடன் மனோகணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி இணைந்து கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் கூட்டுச் சேர்ந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையில் ஜனநாயக தேசிய முன்னணி என்ற கூட்டணியொன்றை உருவாக்கியது.

இருந்தபோதிலும் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு மனோகணேசனின் கட்சி தொடர்ந்தும் ஆதரவளித்து வந்தது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் எனக் கருதப்பட்ட மனோகணேசன் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருந்தார். கொழும்பில் இலகுவாக வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருந்தும் கண்டி மாவட்டத்தில் போட்டியிட அவர் எடுத்த முடிவு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் இதுவரை தமிழ் பிரதிநிதி ஒருவர் இல்லாத சூழ்நிலையிலேயே தாம் களமிறங்கியுள்ளதாக மனோகணேசன் அச்சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக கண்டி மாவட்டத்தில் மனோகணேசன் பல தடவைகளில் அரசியல் வன்முறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போன நிலையில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மனோகணேசனுக்கு வழங்கப்படாமையே ஐக்கிய தேசியக் கட்சியுடனான முறுகலுக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. (6-4)

---

# வடக்கு மாகாண சபை தேர்தல் 6 மாதகாலத்துக்குள் நடத்தப்படும்

## டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை தேர்தல் இன்னும் ஆறுமாத காலத்துக்குள் நடத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை தேர்தல் விடயம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்து விட்டது. தேர்தலில் ஐக்கிய ரீதியில் தமது பிரதிநிதித்துவங்களை தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இதேவேளை வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கின்றது. பொதுவாக நோக்குமிடத்து இன்னும் ஆறு மாதகாலத்துக்குள் வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்பதனை மிகவும் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்.

இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கும். மேலும் வடக்கு மாகாண சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும்.

இங்கு எந்தக் கட்சி போட்டியிடுகின்றது என்பது முக்கியமல்ல. ஆனால் வடக்கு மக்கள் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றனர் என்பதே முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

முக்கியமாக இன்று கிழக்கு மாகாண சபை மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அப்பிரதேச மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர். அதே போன்று வடக்கிலும் இடம்பெற வேண்டும். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே எமது கடமையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# வீதி விஸ்தரிப்பு வேலைகள் தடங்கலின்றி நடைபெற ஒத்துழைக்குமாறு கோரிக்கை

யாழ். பருத்தித்துறை வீதி அகலமாக்கும் திட்டத்துக்கு சுயமாக காணிகளை வழங்கி ஒத்துழைக்கும் அனைத்து மக்களுக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

கோப்பாய் பிரதேச செயலர், கரவெட்டி பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆகிய பிரதேச செயலர்களின் நிர்வாகத்தின் கீழ் அமையும் யாழ்.-பருத்தித்துறை வீதியில் வதியும் மக்களுக்கும், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்களுக்கும் அத்துடன் சகல அபிவிருத்தி வேலைகளுக்கும் எமக்கு உறுதுணையாக அறிவுரைகளை வழங்கி வரும் அரசாங்க அதிபருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

தாங்களாக விரும்பி காணிகளை விட்டுக் கொடுக்கும் மக்களின் காணிகள் மட்டுமே வீதி அகலமாக்கும் பணிக்கு பயன்படுத்தப் படுகின்றது.

நஷ்ட ஈடு வழங்கப்படாவிட்டாலும் அதற்கும் மேலாக உடைக்கப்படும் மதில்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. உடைக்கப்படும் கடைகளுக்குரிய மூலப்பொருட்களும் மற்றைய உதவிகளும் வழங்கப்படுகின்றன.

நஷ்ட ஈடு பெறுவதற்கான படிமுறையானது மிகவும் நீண்ட காலத்தை எடுக்கும். 4 அல்லது 5 வருடங்கள் பிடிக்கும். அத்துடன் அரச மதிப்பீட்டுத் தொகையே சிபார்சு செய்யப்படும். அது மட்டுமல்ல இப்போது ஒவ்வொரு பொது மகனும் தங்கள் காணியில் 4அல்லது 5 அடி தூரம் மட்டுமே தங்கள் வேலிகளை நகர்த்தி உள்ளார்கள். ஆனால் நஷ்ட ஈட்டு படிமுறையில் காணிகளை சுவீகரிப்பதாயின் மக்கள் தங்கள் காணிகளை 15' அல்லது 20' விட்டுக் கொடுக்க வேண்டி இருக்கும். ஏனெனில் வீதியின் மத்தியில் இருந்து 50 அடிதூரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அபிவிருத்திப் பணிக்கு உரியதாகும். இப் படிமுறையில் செல்லும் போது 90 வீதமான மக்கள் தங்கள் வீடு வாசல்களை, கடைகளை முற்றுமுழுதாக இழப்பர்.

அவற்றை உணர்ந்த மக்கள் சமயோசித பக்தியுடன் தூரநோக்கு சிந்தனையுடனும் தமது சுய விருப்பத்தில் தங்கள் காணிகளை விட்டுக்கொடுத்து விபத்துக்கள் அற்ற சமுதாயத்தை உருவாக்க அர்ப்பணிப்புக் களை பெற்றுள்ளார்கள்.

மேலும் அடுத்த 40,50 வருடங்களுக்கு வீதி அகலமாக்கும் தேவை ஏற்படாது.

ஆதலால் புத்திஜீவிகள் பத்திரிகைகளில் அறிக்கை விடுவதற்கு முன்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்தாலோசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

அரசாங்க அதிபரின் தலைமையில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், நிறைவேற்று பொறியியலாளர்கள், புத்திஜீவிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி கூட்டம் நடத்தப்பட்டது. அதில் சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களுக்கு அமைய பாரிய வீதி அகலமாக்கும் பணி நடைபெறுகிறது.

அரசாங்க அதிபர் ADB, மேலதிக பணிப்பாளர், RDAபிரதம பொறியியலா ளர், நிறைவேற்று பொறியியலாளர்கள் நேரடியாக விஸ்தரிப்பு இடம்பெறும் புத்தூர் ,ஆவரங்கால் பகுதிகளுக்கு விஜயம் செய்து வேலைகளை பார்வையிட்டதுடன் நேரடியாக மக்களின் இருப்பிடங்களுக்குச் சென்று அவர்களின் சுயவிருப்பங்களையும் கேட்டறிந்தார்கள்.

யாழ்.- பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணியை அடுத்து சீன அரசாங்கத்தின் நிதி உதவியுடன் யாழ்.-காங்கேசன்துறை வீதி, யாழ். -பலாலி வீதி, புத்தூர் - மீசாலை வீதி, யாழ்- பருத்தித்துறை வீதியில் 0-9 கிமீ என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

யாழ்.-காங்கேசன்துறை வீதி அகலமாக்கும் பணியில் கலாசார தொன்மைகளை பாதுகாக்க வேண்டும் என்ற தூர சிந்தனையுடன் யாழ்.-காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள நாச்சிமார் கோவில் தேவஸ்தான நிர்வாக சபையுடனும், வண்ணை பிள்ளையார் கோவில் நிர்வாக சபையுடனும் கடந்த 20 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டு கோவில் பாதிக்கப்படாதவாறு வீதி விஸ்தரிப்பு செய்வதற்கு அவ்வக் கோவில்களின் நிர்வாக சபையினரின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ்வாறே வீதி அகலமாக்கும் பணி மேற்கொள்ள உள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மற்றைய கோவில்களின் நிர்வாக சபையுடனும் நேரடியாகச் சென்று கலந்தாலோசிக்கப்படும்.

**கிழக்கு , வட மேற்கு மாகாணத்தில் வீதி விஸ்தரிப்பு பணிகள்**

காத்தான்குடி பிரதேசத்தில் மிக நெருக்கமான குடியிருப்பு பகுதிகளில் முதலில் முன் உதாரணமாக மாநகரசபை உறுப்பினரின் பள்ளிவாசல் உடைக்கப்பட்டு பின் நகர்த்தப் பட்டது.

இதைப் பார்த்த மக்கள் தாங்களாகவே சுயவிருப்பில் தமது காணிகளை எவ்வித நஷ்ட ஈடுகளும் இன்றி விட்டுக்கொடுத்து தாங்களே மதில்களை கட்டிக்கொண்டுள்ளார்கள். தற்போது வீதி அகலமாக்கப்பட்டு சிறப்பான போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறுது.

அதுபோல் கடந்த வருடம் மட்டக்களப்பில் மக்களின் பங்களிப்பாக எல்லைகளை மக்களே நகர்த்தி வீதி விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றன.

அதேபோல் புத்தளம் - மன்னார் வீதி மக்கள் தாமாகவே முன்வந்து எந்தவித கொடுப்பனவும் இன்றி தங்கள் காணிகளை விட்டுக்கொடுத்து பாரிய வீதி விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றன.

இவை அனைத்தும் அவ்வப்பகுதி மக்கள் தங்கள் பிரதேசங்களில் கொண்டுள்ள பற்றினாலேயாகும்.

யாழ்.- பருத்தித்துறை வீதி மக்களும் தங்கள் பிரதேசங்களில் கொண்டுள்ள பற்றினால் தங்கள் காணிகளை எந்தவித உபகாரங்களையும் எதிர்பாராமல் விட்டுத் தந்துள்ளமை மிகவும் போற்றுதற்குரியதாகும்.

ஆதலால் வீதி விஸ்தரிப்பு வேலைகளுக்கு மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கி நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட வீதி விஸ்தரிப்பு வேலைகள் தடங்கலின்றி நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள் என்றுள்ளது. (6-4)

## முன்னாள் சபாநாயகர் லொக்குபண்டார சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமனம்

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார சப்ரகமுவ மாகாண ஆளுநராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான லொக்கு பண்டாரவிற்கு இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்படும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் லொக்குபண்டாரவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## களுத்துறை மாவட்டம் நீரில் மூழ்கியதால் — 50 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக களுத்துறை மாவட்டம் நீரில் மூழ்கியுள்ளதுடன் சுமார் 50க்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் களுத்துறை மாவட்ட பிரிவினர் மேற்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (6)

## போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு

(கொழும்பு)




கொட்டாஞ்சேனைப் பகுதியில் நீண்டகாலமாக நடத்தப்பட்டு வரும் போலி ஆவணங்களைத் தயாரிக்கும் நிலையமொன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், அங்கு வைக்கப்பட்டிருந்த கடவுச்சீட்டுக்கள் உட்பட பெருமளவு போலி ஆவணங்களைக் கைப்பற்றிய கொட்டாஞ்சேனைப் பொலிஸார், மூன்று பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.



இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தகவல் தருகையில் கூறியதாவது,

கொட்டாஞ்சேனை வித்தியாலய வீதியில் அமைந்துள்ள மேற்படி நிலையத்துக்கு நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் விரைந்த பொலிஸார், அங்கு போலி ஆவணங்களைத் தயாரித்துக்கொண்டிருந்த மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

அத்துடன், அந்நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது கடவுச்சீட்டுக்கள் -19,இறப்பர் முத்திரை, விசா அனுமதிப் பத்திரம் மற்றும் பணம் போன்றவற்றைப் பரிசோதிக்கும் இயந்திரம், இந்தியன் இமிக்ரேஷன் சென்னை எயார் போட் என்று பொறிக்கப்பட்ட போலி இறப்பர் முத்திரை, புகைப்படம் பொறிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் பிரதிகள் -48, புகைப்படம் அற்ற கடவுச் சீட்டுக்கள் -05, டுபாய் ஊடாக சென்னைக்குப் பயணிப்பதற்கான விமானச் சீட்டுக்கள்-03, விமானச் சீட்டுக்களின் பிரதிகள் -26 உள்ளிட்ட மேலும் பல ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (6)

சர்வதேச இணைய வானொலி வாரணம் எவ்.எம்.இன் ஊடக அனுசரணையில் ஹட்டன் குயில்வத்தை தமிழ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கலை, கலாசார விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வாரணம் எவ்.எம். பணிப்பாளர் எஸ்.குணசீலன் உரையாற்றுவதையும், யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பயிற்சி அறிவிப்பாளர்கள் பொதுமக்களைச் சந்தித்து தகவல் சேகரிப்பதையும், கலந்துகொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.


பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் கே.பூரணம்பிள்ளையின் நூற்றாண்டுவிழாவும் நூல்வெளியீடும் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவர் எஸ்.பாலசுப்பிரமணியம், கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா ஆகியோர் உரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

### பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை

பா.பிரியதர்சினி -9ஏ, உ.சோபிதா -5ஏ, 2பி, 2சி, க.றஜீவன் -4ஏ, 2பி, 3எஸ், ஞா.வினோதினி -4ஏ,5சி, சி.கௌசிகன்-4ஏ, 4சி, அ.கான்சியூஸ் அனிஸ்ரன் -3ஏ,பி,4சி,எஸ்,சி.தனுஷா-3ஏ,பி,3சி,2எஸ், த.சர்மிலா -2ஏ,பி,சி,4எஸ், வ.அருந்தஷா-2ஏ,2பி,சி,3எஸ், சு.விக்னேஸ்வரன்-2ஏ,சி, 5எஸ், மு.உஷாராணி-2ஏ, 2சி, 4எஸ், சோ.நிதர்சன்-ஏ,3சி,3எஸ், தே.தேவமலர்-3பி,5எஸ். (4)




## 9ஏ பெற்ற மாணவர்களின் விபரங்களை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2009 இல் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9ஏ எடுத்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய குறித்த வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 9 ஏ எடுத்த மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு சம்மேளனச் செயலாளர் செ.குமாரசிங்கம் அறிவித்துள்ளார். (6-4)

## நூல் வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொது நூலகத்தினால் இன்று வெளியிடப்படவிருந்த சிறுவர் ஆக்கங்களை உள்ளடக்கிய "கொக்குவர் சுட்டி பகுதி - II நூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள நூலக வாரத்தன்று கலை நிகழ்வுகளுடன் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக நூலகர் அறிவித்துள்ளார். (4-30)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்களிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தருடனான விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலுக்கு உத்தியோகத்தர்களை தவறாது சமுகமளிக்குமாறு மாவட்ட அதிகாரி அறிவித்துள்ளார்.(6-4-30)

## சித்திரத் தேர் வெள்ளோட்டமும் — சிறப்பு மலர் வெளியீடும் —

(யாழ்ப்பாணம்)

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் சித்திர, சிற்ப மணித்தேர் வெள்ளோட்டமும் வெளியீடும் நாளை சனிக்கிழமை மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் தி.செல்வநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிற்பகல் 3 மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டமும் பிற்பகல் 3.30 மணிக்கு தேர் சிற்பக் கலைஞர்களையும் தேர் மண்டப கட்டடக் கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேலும் பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையில் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. இதில் நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.(6-4)

## கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2010 இற்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்கான இறுதி நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்ளவிருப்பதுடன் ஆண், பெண் ஆகியோருக்கான ஓட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக பிரதேச செயலக விளையாட்டுப் பேரவை அறிவித்துள்ளது. (6-30)

## நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள இந்து ஆலயங்களுக்கான பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இந்து ஆலயங்களுக்கான பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்தின் போது இந்து ஆலயங்களுக்கான ஒன்றிய அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதில் 2007, 2008, 2009 ஆகிய காலப் பகுதியில் எவ்வித நிதியுதவியும் கிடைக்கப் பெறாததுடன் பின்தங்கிய நிலையிலுள்ள ஆலயங்களுக்கான நிதியுதவி வழங்குவதற்காக அவற்றின் விபரங்களும் திரட்டப்படவுள்ளதால் ஆலய தர்மகர்த்தா அல்லது நிர்வாக சபையின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-30)

## 'மின்ஒளி' மலர்வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்

(குருநகர்)

இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தின் "மின் ஒளி" மலர் வெளியீடும் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு துரைராஜா மண்டபத்தில் சங்க தலைவர் சி. குமாரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபையின் ஓய்வுபெற்ற மேலதிக பொது முகாமையாளர் வே. இராஜேந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் இ. முத்துரட்ணானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நூல் அறிமுகவுரையை யாழ் பல்கலைக்கழக வேலைப்பகுதி இயந்திரவியலாளர் சி. தயாபரன் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் பி. நாகரத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் இவ்வருடத்தில் ஓய்வுபெற்ற 31 ஊழியர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-39)

## ஷேக்ஸ்பியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புகழ்பூத்த ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறப்பு மற்றும் இறப்பினை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலக்கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஷேக்ஸ்பியர் கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ்.பல்கலைக் கழக நூலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமன்றி பாடசாலை, கல்வியியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதால் இதில் குறித்த இலக்கினரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் "மாமுனிவர்களும் நாமும்" என்னும் தலைப்பில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## "மாவீரன் சங்கிலியன்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கலாபூஷணம் அண்ணாவியார் மு. அருள்பிரகாசம் எழுதிய "மாவீரன் சங்கிலியன்" என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலைத்தூது மண்டபத்தில் கலாமன்ற பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ். பல்கலைக்கழக இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரையாளர் அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன், சிறப்புரையை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ. சதானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (4-30)

## இலக்கிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் நடத்தப்படும் இலக்கியக் கருத்தரங்கு நாளை மாலை 3.30 மணிக்கு யாழ்.ஜும்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "இலக்கியத்தில் பாடுபொருள்" என்னும் விடயம் பற்றி கலாநிதி சி.சிவசேகரம் கருத்துரை வழங்கவுள்ளார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (6-4)

திறமையான நீச்சல்காரனைத்தான் ஆறு அடித்துக் கொண்டு செல்கின்றது.
~ ஆபிரிக்கா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கர்ணனுக்கு அங்கதேசம் மனோ கணேசனுக்கு... எங்கே தேசம்!

கொடைக்குக் கர்ணன் என்றுதான் நாம் அறிந்துள்ளோம். அந்தக் கர்ணனுக்கே கொடை கொடுத்தவன் துரியோதனன்.

இராஜகுமாரர்களுக்கான வில்வித்தைப் போட்டியில் கர்ணனும் கலந்து கொள்கின்றான்.

போட்டியில் கலந்து கொள்ள வந்த இராஜகுமாரர்கள் அத்தனை பேரும் கர்ணனைப் பார்த்து தேரோட்டியின் மகன் என ஏளனம் செய்கின்றனர்.

இராஜகுமாரர்கள் மட்டுமே கலந்து கொள்ளக் கூடிய வில்வித்தைப் போட்டியில் தேரோட்டியின் மகன் எங்ஙனம் பங்கேற்ற முடியும் என சர்ச்சை எழுகின்றது.

கர்ணன் நாணிக்கோணி தலைகுனிந்து நிற்கிறான். அந்த நேரத்தில் சபை நடுவே எழுந்து கர்ணனை நான் இராஜகுமாரன் ஆக்குகின்றேன் என துரியோதனன் முழுங்குகின்றான்.

கர்ணனை இராஜகுமாரனாக்கினால் அவனுக்கு தேசம் எங்கே என்று வினா எழுகிறது.

'அங்கததேசம்' என்று துரியோதனன் மொழிகின்றான். துரியோதனனின் மொழிதலோடு கர்ணனுக்கு முடிசூட்டப்படுகிறது. இராஜகுமாரன் ஆனான் கர்ணன்.

இங்குதான் துரியோதனனின் உயர்ந்த குணம் வெளிப்படுகின்றது. கொடை வள்ளலான கர்ணனுக்கே கொடை கொடுத்தவன் அல்லவா துரியோதனன்.

அவன் கொடை கொடுக்காவிடில் பார்த்த சாரதிக்கு கொடை கொடுப்பதற்குக் கூட கர்ணன் இருந்திருக்க மாட்டான்.

எனவே கொடையில் சிறந்தவன் யாரென்றால் துரியோதனன் என்றுதான் கூற வேண்டும்.

இதை நாம் கூறினால் இதெல்லாம் இப்போது எதற்கு என்று நீங்கள் நிச்சயம் கேட்பீர்கள். இங்குதான் பிரச்சினையே ஆரம்பமாகின்றது.

மனோ கணேசன் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி அவரின் காலை வாரிவிட்டது.

தமிழ் மக்களுக்காக துணிந்து குரல் கொடுத்தவர் மனோகணேசன். இந்த உண்மையை தமிழ் மக்கள் மறத்தல் ஆகாது.

மனோகணேசன் நாடாளுமன்றம் சென்றால் மச்ச இயந்திரத்தை வீழ்த்தும் வல்லமை தமிழருக்குக் கிடைக்கும். எங்கே மனோ கணேசனுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் 'அங்கததேசத்தை' கொடுக்குமா என்று பார்ப்போம். கொடுத்தால் நன்மை நமக்கே.

# பார்வதி அம்மாளை சென்னைக்கு அழைத்து வந்து சிகிச்சையளிக்கக்கோரி மனுத்தாக்கல்

(சென்னை).

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடைய தாயார் பார்வதி அம்மாளை சிறப்பு விமானம் அனுப்பி சென்னைக்கு அழைத்து வந்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி மூத்த வழக்கறிஞர் கருப்பன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக தலைமை நீதிபதி எச்.எல். கோகலேவை நேற்று முன்தினம் சந்தித்து முறையிட்டார் கருப்பன். அப்போது அவரிடம் இதுதொடர்பாக ரிட்மனுவைத் தாக்கல் செய்யுமாறு தலைமை நீதிபதி அறிவுறுத்தினார். இதையடுத்து கருப்பன் ரிட்மனு தாக்கல் செய்தார்.

அதில் முறையான விசாபெற்று இந்தியாவுக்கு வந்த பார்வதி அம்மாளை எந்தவிதக் காரணமும் இல்லாமல் விமானத்தை விட்டு இறங்கக் கூட அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இது மனிதாபிமானமற்ற செயல்.

அவரை சிறப்பு விமானம் அனுப்பி சென்னைக்கு அழைத்து வந்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார் கருப்பன்.

இந்த மனு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# நளினி மீது மூன்று பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது

(வேலூர்)


கைத்தொலைபேசி மீட்கப்பட்டதைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளி நளினி மீது 3 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் பெண்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியின் அறையில் சிறைக் கண்காணிப்பாளர் ராஜலட்சுமி மற்றும் காவலர்கள் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை நடத்தினர்.

பையை சோதனை செய்ய முற்படும்போது அதிலிருந்த கைத்தொலைபேசியை பொலிஸார் கைப்பற்றினர். இச்சம்பவம் குறித்து வேலூரை அடுத்த பாகாயம் பொலிஸ் நிலையத்தில் சிறைக் கண்காணிப்பாளர் ராஜலட்சுமி புதன்கிழமை இரவு புகார் கொடுத்தார்.

அரசு அதிகாரிகளைப் பணி செய்ய விடாமல் தடுத்தது, தடை செய்யப்பட்ட பொருள்களை சிறை வளாகத்துக்குள் கொண்டு வந்தது, பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளிடம் அத்துமீறி நடந்து கொண்டது ஆகிய 3 பிரிவுகளின் கீழ் நளினி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக தனிச் சிறையில் நளினியிடம் பொலிஸார் வியாழக்கிழமை விசாரணை நடத்துவார்கள் எனத் தெரிகிறது. (4-6)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## இறைவழிபாட்டு முறை

எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் முதலில் ராஜகோபுரத்தை வணங்க வேண்டும். கோபுரம் இல்லாத கோயில்களில் வாசல்படிகளைத் தொட்டு வணங்க வேண்டும். இந்தப் படிகள் இறைவனின் அடியார்களாகக் கருதப்படுகின்றன. உள்ளே சென்றதும் பலி பீடத்தையும் , கொடி மரம் இருந்தால் அதையும் வலம் வந்து வணங்க வேண்டும். பிறகு இறைவனின் வாகனத்தையும், இறைவன் இருக்கும் இடத்தையும் வலமாகக் சுற்றி வந்து வழிபடவேண்டும்.

தெய்வத்தோடு ஒன்றிய நிலையில் வணங்க வேண்டும். வழிபாடை முடித்த பிறகு ஆலயத்தில் ஓர் இடத்தில் அமைதியுடன் அமர்ந்து தியானம் செய்து அந்நிலையிலேயே இறையருளைப் பெற்றுச் செல்ல வேண்டும்.

# வெள்ளி நற்சிந்தனை 119

# பக்தியின் மொழி தமிழ்

பக்தி வசப்பட்டோர் இறைவனது தோற்றத்தை புறக்கண்களாலே காண்பதற்கு பெரிதும் விரும்புவர். நாயன்மார்களுடைய பாடல்களில் இறைவன் திருக்கோலம் சிறப்பாகச் சொற்சித்திரங்களாக வரையப்பட்டுள்ளது. இளம் வயதினராய சம்பந்தருடைய பாடல்களில் இறைவனின் கோலமும் அருட்செயல்களும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும் போது மனக்கண்களிலே அகக் காட்சிகளை காண முடியும். திருக்கோயிலை வழிபடச் செல்வோர் உள்ளத்திலே பரவசம் ஏற்படும் வகையில் சம்பந்தர் குறிப்புக்களைத் தந்துள்ளார். அவரது இறையனுபவமும் மெய்யுணர்வும் சொற்களிலே நன்கு வெளிப்பட்டுள்ளன. சொற்கள் காட்டும் காட்சி ஒரு நேரடி அனுபவம் போல அமைந்துள்ளது. இறை வனைச் சம்பந்தர் தனது கண்களால் நேரே பார்த்து பரவச மாகியதை சொற்களால் வெளிப்படுத்தியுள்ளார். ஒருவர் தமது கண்களால் கண்ட அருட்காட்சியைப் பிறருக்கும் காட்ட வேண்டும் என எண்ணினால் அதைக் கண்டவாறே பக்தி அனுபவத்துடன் எடுத்துரைக்க வேண்டும். அந்த உரை கேட்பவரையும் அந்த காட்சி அனுபவத்தைப் பெறவைக்கும் இப்பண்பு சம்பந்தர் பாடல்களிலே பரவலாக உள்ளது.

இறைவனது திருமுடியின் தோற்றம் அவர்பாடலில் வெளிப்படுத்தப்படும் பாங்கு மிகச் சிறப்பானது. தலையிலே சூடியுள்ள திங்களையும் நாகத்தையும் பற்றிக்குறிப்பிடும் போது அவற்றை நேரில் கண்டவாறு கூறுகிறார். சம்பந்தரது பக்தி அனுபவம் அத்தகையது. தலையிலே சூடியுள்ள திங்களின் தோற்றத்தை *பனித்தினம் திங்கள்* என்று குறிப்பிடுகிறார். குளிர்மையான இளம் பிறையை நாம் பல முறை கண்டிருக்கிறோம். ஆனால் அது இயற்கையான காட்சியாகவே எமது கண்களில் தெரிகிறது. சம்பந்தர் காட்டும் காட்சி தெய்வீகமானது. இறைவன் திருமுடியைக்காணும் பக்தி பரவசத்தைத் தருவது. பைந்தலை நாகத்தை படர் சடையிலே வைத்திருக்கும் காட்சி நாம் நேரடியாக காண முடியாது. ஆனால் சம்பந்தரது சொற்சித்திரத்தில் அக் காட்சியை நேரே காண முடியும். இறைவியின் தோற் றத்தையும் மிக அண்மையான கோலத்திலே காட்டியுள்ளார். கனிந்த இளமையான பவளம் போல சிவந்த வாயினை யுடைய காரியாக காண வைக்கிறார். இந்த வர்ணணை சம் பந்தரது இளமை நிலையின் வெளிப்பாடு போல தோன் றினும் குழந்தை ஒன்று தான் கண்ட காட்சியை அவ்வாறே கூறுவது போல அமைந்துள்ளது. அர்த்தநாரீஸ்வர வடிவில்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவன் காட்சியாக இருப்பதை சம்பந்தர் காட்டியுள்ளார்.

திரிபுரம் எரித்த அற்புதம் பற்றிய குறிப்பையும் பாடலில் இணைத்துள்ளார். இறைவன் பேராற்றல் எவராலும் உணரப்பட வேண்டியது. புராண இதிகாசங்களிலே கூறப்பட்ட இறைவனுடைய அற்புதங்களை தமது காலத்து மக்களும் அறிய வேண்டும் என்ற நோக்குடனேயே சம்பந்தர் இவ் அற்புதச் செய்திகளை பாடலிலே இணைத்துள்ளார். பேராற்றல் படைத்த இறைவன் திருக்கோலத்தை ஒலிக்கின்ற கடற்கரையிலே அமைந்துள்ள திருக்கோணேஸ்வரத் தலத்திலே கண்டு வழிபடலாம். பக்தி வயப்பட்ட காட்சிகளை அங்கு காணலாம் என சம்பந்தர் பாடலால் அறிவுறுத்துகிறார்.

*"பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்*
*கனித்தினம் துவர்வாய்க் காரிகை பாகமாக முன் கலந்தவர் மதில் மேல்*
*தனித்த பேருவ விழித்தழல் நாகம் தாங்கிய மேருவென்சிலையாக*
*குனித்ததோர் வில்வார் குறைகடல் சூழ்ந்த கோணமாலை யமர்ந்தாரே".*

## சூரியன் தொடர்பான புதிய படங்கள்;


# நாஸா விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது

சூரியன் தொடர்பான புதிய படங்களை நாஸா விண்வெளி ஆய்வு மையம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

சூரியனில் பல்வேறு வெடிப்புக்கள் இடம் பெற்று வருவதாகவும், வாயு வெளியேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படங்கள் மற்றும்வீடியோக் காட்சிகளைப் பயன்படுத்தி சூரியசக்தி மற்றும் சூரிய குடும்பம் பற்றிய புதிய ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என நாஸா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதியுயர் தொழில்நுட்பத்துடன் கூடிய லேசர் டைனமிக் ஒப்பர்வேர்டி எனப்படும்





விசேட கமராவைக் கொண்டு சூரியனின் படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து வருடங்களுக்கு இந்த கமராப் படங்களை விநியோகிக்கும் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எவ்வாறெனினும், சூரியன் பற்றிய ஆய்வுகளைப் பூரணப்படுத்த இன்னும் நீண்டகாலம் தேவைப்படும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த கமரா மிகவும் துல்லியமான படங்களை பல கோணங்களிலிருந்து எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## பிரிட்டன் பொதுத் தேர்தல்;

# ஆசியர்கள் அதிகளவில் போட்டி

(லண்டன்)

பிரிட்டனில் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஆசியப் பிராந்தியத்தை சேர்ந்த பலர் அதிக எண்ணிக்கையில் போட்டியிடுகின்றனர். மொத்தம் 89 வேட்பாளர்கள் போட்டியிடுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் இந்திய வம்சா வழியைச் சேர்ந்தவர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த 89 பேரில் 30 பேர் கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். இந்தக்கட்சி தேர்தலில் வெற்றி பெறும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை தொங்கு நாடாளுமன்றம் அமைந்தால் அதிக எண்ணிக்கையிலான இடங்களில் வெற்றி பெற்றுள்ள கட்சியாக இது கருதப்படும்.

2005 ஆம்ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த 68 பேர் போட்டியிட்டனர். இதில் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த எம்.பிக்கள் 15 பேர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பல புதிய சாதனைகள் நிகழக்கூடும் எனக் கருதப்படுகிறது. குறிப்பாக கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் இந்தத் தேர்தலில் தீவிரமாக பங்கேற்கின்றனர்.

இந்தத் தேர்தலில் கட்சியின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்திகளாக ஆசிய மற்றும் ஆபிரிக்க-கரீபிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பர் என கணிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 100 தொகுதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் முதல் முறையாக பிரிட்டன் தேர்தலில் கறுப்பினத்தவரை முன்னிறுத்தி பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. இனவெறி மறைந்து நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இச் சமூகத்தைச் சேர்ந்த பலரும் போட்டியிடுவதோடு, வாக்களிப்பதிலும் தீவிரமாக உள்ளனர் என்று இச்சமுதாயத்தைச் சேர்ந்த இயக்குநர் சிமோன் வூலி தெரிவித்தார். (6)




# மேலும் ஒரு எரிமலை உலக நாடுகளை மிரட்டுகிறது

## சமீபத்தில் வெடித்ததை விட 10 மடங்கு பெரியது



ஐஸ்லாந்து நாட்டில் உள்ள எரிமலை வெடித்ததில் கிளம்பிய புகை ஐரோப்பாவின் பலபகுதிகளை புகைமண்டலமாக மாற்றி விட்டதால், உலக அளவில் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இப்போது இன்னும் ஒரு எரிமலை வெடிக்க இருக்கிறது. அது முந்தைய எரிமலையை விட 10 மடங்கு பெரியது ஆகும். இது வெடித்தால் பாதிப்பு இன்னும் அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

ஐரோப்பாவில் உள்ள ஐஸ்லாந்து நாட்டில் உள்ள எய்ஜாப்ஜலாஜோகுல் என்ற எரிமலை வெடித்தது. அது எரிமலைக் குழம்புகளை கக்கியதோடு அதனுள் இருந்து எழுந்த புகையும் சாம்பலும் ஐரோப்பா முழுவதும் பரவி, விமான போக்குவரத்தை பாதித்தது. நூற்றுக் கணக்கான விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன. இதனால் உலகம் முழுவதிலும் விமானப் பயணிகள் கடந்த ஒரு வாரமாக தாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு செல்லமுடியாமல் தத்தளித்தனர்.

இந்தப் பிரச்சினை இத்தோடு முடியவில்லை. இதுதான் தொடக்கம் போலத் தெரிகிறது.

எய்ஜாப்ஜலாஜோகுல் எரிமலைக்கு அருகில் 20 கி.மீ. தொலைவில் உள்ளது இன்னுமொரு எரிமலை கட்லா. இது விரைவில் வெடிக்க இருக்கிறது. இது வெழுத்து சீறி, எரிமலை குழம்புகளை கக்கினால், அதன் பாதிப்பு மிகப்பெரிய அளவில் இருக்கும் என்று விஞ்ஞானிகள் அஞ்சுகிறார்கள்.

இது எய்ஜாப்ஜலாஜோகுல் எரிமலையை விட 10 மடங்கு பெரியது ஆகும். இது வெடிக்குமானால், இதில் இருந்து வெளிப்படும் புகையும் சாம்பலும் அதிக உயரத்துக்கு கிளம்பும் என்று அஞ்சப்படுகிறது. இதை 500 மீற்றர் கனத்துக்கு பனிமூடி உள்ளது.

இது எப்போது வெடிக்கும் என்று விஞ்ஞானிகள் கண்காணித்து வருகிறார்கள்.

பக்கத்து பக்கத்தில் உள்ள 2 எரிமலைகளில் ஒன்று வெடித்தால், அது அடுத்ததையும் வெடிக்கச் செய்யும். கடந்தகாலத்தில் இந்த 2 எரிமலைகளும் ஒரே நேரத்தில் வெடித்தன. கடந்த காலத்தில் 3முறை இந்த 3 எரிமலைகளும் ஒரே நேரத்தில் வெடித்திருக்கின்றன என்று ஐஸ்லாந்து பல்கலைக்கழக புவி இயற்பியல் துறை பேராசிரியர் பால் எய்னார்சன் தெரிவித்தார்.

கட்லா எரிமலை 80 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெடிப்பது வழக்கம். இது கடந்த முறை வெடித்தது 1918 ஆம்ஆண்டு ஆகும்.

எனவே கட்லா எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் என்பதால் அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் அச்சம் அடைந்துள்ளனர். அவர்கள் அந்தப் பகுதியை காலி செய்து விட்டு வெளியேற இருக்கிறார்கள்.(6)

## ரஷ்யாவில் குண்டுவெடிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தகெஸ்தான் பகுதியில் இரண்டு குண்டுகள் வெடித்ததில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள தகெஸ்தான் நாட்டின் வடக்கு காக்கசஸ் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு குண்டுகள் வெடித்தன. முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் மக்காச்கலா நகரில் நடந்த இந்த குண்டு வெடிப்பில் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரியின் உறவினர் உட்பட இரண்டு பேர் காயமடைந்தனர். செசன்யா பயங்கரவாதிகள் இங்கு அடிக்கடி நாசவேலைகளை ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## அமெரிக்காவை தாக்க ஈரான் தயாரிக்கும் ஏவுகணை

ஈரான் அமெரிக்காவுக்கு எதிரான நாடாக செயல்பட்டு வருகிறது. ஈரான் தற்போது அணு குண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு அமெரிக்கா முட்டுக்கட்டை போடும் வேலைகளை தொடர்ந்து செய்து வருகிறது. இது இரு நாடுகளுக்கும் இடையே பெரும் பிரச்சினையை உருவாக்கி உள்ளது.

அமெரிக்கா ஒரு வேளை ஈரான் மீது தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை எதிர்கொள்வதற்கு ஈரானும் தயாராகிவருகிறது.

எதிர்காலத்தில் அமெரிக்காவையே தாக்குவதற்கும் ஈரான் தன்னை தயார்ப்படுத்தி கொண்டு வருகிறது.

அந்தவகையில் ஈரானில் இருந்தபடி கண்டம்விட்டு கண்டம் தாவும் ஏவுகணை மூலம் அமெரிக்காவை தாக்கவேண்டும் என்பதும் ஈரானின் திட்டமாகும். இதற்காக அதிக சக்தி கொண்ட ஏவுகணையை தாயரிக்கும் முயற்சியிலும் ஈரான் இரகசியமாக இறங்கியுள்ளது. இதற்கு அமெரிக்காவுக்கு எதிரான நாடுகள் உதவி வருவதாகவும் கூறப்படுகிறது. குறிப்பாக வடகொரியா, சீனா உதவி ஈரானுக்கு இருப்பதாக தெரிகிறது. (6)

# சந்திரன், செவ்வாயில் தண்ணீர்;

## அமெரிக்க விஞ்ஞானிகள் உறுதி செய்தனர்

(வோஷிங்டன்)

சந்திரனிலும் செவ்வாயிலும் தண்ணீர் இருப்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இது சம்பந்தமான ஆய்வு ஒன்றை அவர்கள் சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். இந்தியாவின் சந்திராயன் சந்திரனில் தண்ணீர் இருப்பதைக் கண்டறிந்தது. இதையடுத்து அமெரிக்காவின் ஹூஸ்டனிலுள்ள லூனார் அண்டு பிளானட்டரி இன்ஸ்டிடியூட் விஞ்ஞானிகள் அதை உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அத்தோடு செவ்வாய்க் கிரகத்திலும் தண்ணீர் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் இரண்டு ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். முதல் ஆய்வறிக்கை சந்திரன் மற்றும் செவ்வாயில் தண்ணீர் இருப் பதை உறுதி செய்துள்ளது. இரண்டாவது அறிக்கை தண்ணீர் எவ்விதத்தில் இரு கிரகங்களிலும் இருக்கிறது என்பதை விவரிக்கிறது. அதன்படி செவ்வாயில் சமீபத்தில் பனி உருகி பின் இறுகி பனிக்கட்டியாக இருக்கிறது. அதற்கான ஆதாரமாக நீர் ஓடிய தடம் அங்கு காணப் படுகிறது. அதன் அகலம் ஆறு அடி நீளம் 400 அடி.

மேலும் இந்த தடத்திலிருந்து பல இடங்களில் கிளை கால்வாய்கள் ஓடியிருக்கின்றன. சந்திரனிலும் இதேபோன்று பனிக்கட்டிகள் ஆங்காங்கே உறைந்து கிடக்கின்றன. இது குறித்து லூனார் இன்ஸ்டிடியூட்டின் பால் ஸ்படிஸ் என்பவர் கூறுகையில்,

தண்ணீரின் மூலக்கூறுகள் கொண்ட வால் நட்சத்திரம் அல்லது எரி நட்சத்திரம் சந்திரனில் மோதியதால் தண்ணீர் சந்திரனில் உருவாகியிருக்க கூடும்.

சந்திரனில் காணப்படும் பள்ளம் வழக்கத்துக்கு மாறானதாக இருந்தாலும் அதில் ஆறடி முதல் 10 அடி உயரத்திற்கு பனிக்கட்டிகள் காணப்படுகின்றன என்று தெரிவித்தார். மேலும் இந்த இரண்டு ஆய்வறிக்கைகளும் சூரியக் குடும்பம் மற்றும் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியும் ஆராய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# மெரினாவில் பிடிபட்ட இலங்கையர் பாஸ்போர்ட் சட்டத்தில் சிறையிலடைப்பு

(சென்னை)

மெரீனாவில் பிடிப்பட்ட இலங்கையர் பாஸ்போர்ட் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டார்.

பெங்களூரில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் போது நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சென்னையில் பாதுகாப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தும் வகையில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டதில் 400 பேர் பிடிபட்டனர்.

சென்னை மெரீனா கடற்கரை பகுதியில் பதுங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த முகமது அசார் என்பவரும் கைது செய்யப்பட்டார். இவரிடம் பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்கள் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் விடுதலைப் புலிகள் ஆதரவாளராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் 10 ஆம் வகுப்பு வரையில் படித்துள்ள முகமது அசார் இலங்கையில் இறால் பண்ணையில் பணியாற்றி வந்ததும் தமிழகத்திற்கு வந்து இங்கு வேலை தேடி அலைந்ததும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து நேற்று முன்தினம் பாஸ்போர்ட் சட்ட விதிமுறைகளின்படி முகமது அசாரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். (6)

# நடப்பு சம்பியன் டெக்கான் அணியை வெளியேற்றி சென்னை அணி இறுதிப் போட்டிக்கு நுழைவு

## நாளை மறுதினம் மும்பை அணியுடன் மோதல்

(மும்பை)

பொல்லிங்கரின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 38 ஓட்டங்களால் நடப்பு சம்பியன் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் சுற்று ஆட்டங்களின் முடிபில் புள்ளிகள் அடிப்படையில் மும்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், சென்னை சுப்பர்கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இந் நிலையில் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்றிரவு மும்பையில் நடைபெற்றது.

இப் போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சி கொடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் 09 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 08 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 2 ஓவர்களில் 12 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து சிறிது நேரம் அதிரடி காட்டிய முரளி விஜய் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 15 ஓட்டங்களுடனும் அணியை கரை சேர்ப்பார் என கருதப்பட்ட சுரேஸ் ரெய்னா 02 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 4.5 ஓவர்களில் 29 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் பத்திரிநாத்துடன் இணைந்த தோனி, நிலைமையுணர்ந்து பொறுப்புடன் துடுப்பெடுத்தாட சென்னை சுப்பர்கிங்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 8.3 ஓவர்களில் 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அணித்தலைவர் தோனி 32 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அல்பி மோர்கல் 04 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நடையைக்கட்டினார். தொடர்ந்து அனிருத் களமிறங்க மறுமுனையில் பத்ரிநாத் 41 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் அனிருத் அதிரடியாக எடுத்த 24 ஓட்டங்களுடன் கௌரவமான இலக்கை அடைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 142 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறிகாந் அனிருத் 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 24 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ரியான் ஹரின் 3 விக்கெட்டுக்களையும் அன்ரூ சைமண்ட்ஸ், பிரஜன் ஓஜா, ஹார்மிற் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 143 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி ஆரம்பத்தில் சறுக்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 20 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 15 ஓட்டங்களையும் அடுத்து வந்த ரி.சுமன் 04, ரோகித் சர்மா 02 ஓட்டங்களையும் கோர்சல் கிப்ஸ் 26 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 18 ஓட்டங்களையும் மிஷ்ரா 02 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்து வெளியேற டெக்கான் சார்ஜர்ஸ் அணி 12.1 ஓவர்களில் 54 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

ஒரு முனையில் விக்கெட் சரிந்தாலும் மறு முனையில் சிறப்பாக ஆடிய சைமண்ட்ஸ் ஓரளவு நம்பிக்கையளித்தார்.

எனினும் அன்ரூ சைமண்ட்ஸ் 22 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி சரிவு கண்டது.

இந்நிலையில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 19.2 ஓவர்களில் 104 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை யிழந்தது.

இதில் சுமாந்த் 18 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 16 ஓட்டங்களையும் ரியான் ஹரிஸ் 08 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட 15 ஓட்டங்களையும் எடுத்தனர்,

பந்துவீச்சில் பொல்லிங்கர் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 13 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களைச் சாய்த்து சென்னை அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்தார்.

அத்துடன் ஜகதி 2 விக்கெட்டுக்களையும் அஸ்வின், முரளிதரன், மோர்கல், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது. நாளைமறுதினம் மும்பையில் நடைபெறும் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மும்பை இந்தியன்ஸ் அணியை சந்திக்கிறது.

இதேவேளை நடப்புச் சம்பியன் டெக்கான் சார்ஜர்ஸ் அணி நாளை நடைபெறும் மூன்றாவது அணிக்கான போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை சந்திக்கிறது.

## புதிய அமைச்...

அமைச்சரவையில் அதிகளவான விருப்பு வாக்குகளைப் பெற்ற பசில் ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் மாத்திரமே புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த முறை அமைச்சுப்பதவிகளில் வகித்த அமைச்சர்களது பதவிகள் பல மாறுவதுடன் சில அமைச்சர்களுக்கு மாத்திரமே இந்த முறையும் அதே அமைச்சுப் பதவிகள் கிடைக்கும்.

தகவல்களின்படி, பசில் ராஜபக்ஷவுக்குச் சுற்றுலாத்துறை மற்றும் துறைமுக பொது விமான சேவை அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது.

ஜி.எல்.பீரிஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகவும், குமார வெல்கம போக்குவரத்து அமைச் சராகவும் நியமிக்கப்படுவதுடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சராக பாட்லி சம்பிக்க ரணவக்க செயற்படவுள்ளதாக அறிய வருகின்றது.

பந்துல குணவர்த்தன மற்றும் மைத்திரி பால சிறிசேன போன்ற முன்னாள் அமைச்சர்களுக்கு முன்னர் வகித்த அமைச்சுப்பதவிகளே வழங்கப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5,9)


**கம்பியூட்டர் மெகா சேல்**

ஏப்ரல் 2010 - 24, 25, 26 ஆகிய தினங்களில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

ரூபா 10,000-20,000 வரை கணனிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- அரசாங்க தொழிலாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு விசேட கழிவில் வழங்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு: 071- 8570604, 071 3680707

(1240)

**கணனி மூலம் கட்டிட வரைபடம் வரையும் தொழில் நுட்பவியலாளர்களுக்கான இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு!!!**

(Mega Engineering CAD with 3D Building Technology)

FREE SEMINAR !!! FREE SEMINAR !!!

- காலம் :- 25/04/2010 (ஞாயிற்றுக் கிழமை)
- நேரம் :- காலை 10.00 மணிக்கு
- இடம் :- UNI - ICT Campus No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

(சு-138)

இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இன்றே கீழே உள்ள எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து வருதல் வேண்டும். முற்பதிவு செய்வோர் மட்டுமே இக் கருத்தரங்கில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படும்.

எமது தொலைபேசி இலக்கம் - 021 - 321 - 6433 / 0777 110 862

இந்திய வல்லுனரின் அதி உன்னத இவ் வழிகாட்டல் கருத்தரங்கில் இத்துறை சார்ந்த அனைவரும் பங்கு பற்றி பயன் பெற அன்புடன் அழைக்கின்றோம் !!!

மாதம் 40000/= மேல் நீங்கள் உழைக்க முடியும் !!!

**யாழ் நகரில்**

**British College of Higher Studies** ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் (Personality Development) பயிற்சிப் பட்டறைகள் (Work shops)

**இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை**

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**

No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.

web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499

(சி-136)

**STUDY IN**

**UK, Canada, Singapore, Malaysia Swiss, Germany, Italy, India**

Special Merit Scholarships for Srilankan Students

**Course Details**

Architecture,Art @ Design
BEng civil engineering
BSc construction Management
Bsc Software Engineering
BSc computer Networks
BSc Multimedia
BA English Literature
BA Business Management
BA Accountig & Finance
BA Finance,Money & banking
BA Sociology
MA TESOL
MA Refugee Studies

MSc civil engineering
MSc/MSc Information Security
MSc/MSc Information Technology
MSc Mobile Communication
MSc Computer System Engineering
MSc International marketing
MSc/MSc Financial Marketing
MSc/MSc Project Management
MSc Biomedical Science
BSc Health Promotion
BSc Health Service Management

Airticketing, Accomadation
Medical facilities,
Sponsor facilities

call us now for free consultancy or email us your inquiry

100% Reliable VISA

Hotline:-0714723477
Email:- rajeef456@gmail.com

(1224)

## புலனாய்வுத்துறையினர் எனக் கூறி...

என்னை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். இந் நிலையில் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மகேந்திரன், இராணுவப் புலனாய்வாளர்கள் (கடத்தல்காரர்கள்) வருமாறு அழைத்ததாகவும் அங்கு போவதற்கு என்னையும் வருமாறு கேட்டார்.

இதற்கமைய மகேந்திரனின் வீட்டிருந்து இருவரும் மோட்டார் சைக்கிளில் யாழ்.நகருக்குப் புறப்பட்டோம். அப்போது யாழ்.நகரில் தரித்து நின்ற கடத்தல்காரர்களில் ஒருவர் என்னை இறக்கி விட்டு மகேந்திரனின் மோட்டார் சைக்கிளில் அவரை மட்டும் அழைத்துச் சென்றார்.

பின்னர் அரைமணி நேரத்தில் மகேந்திரனின் மோட்டார் சைக்கிளில் வந்த கடத்தல்காரர் என்னையும் அழைத்துச் சென்று வீடொன்றில் தங்க வைத்தார்.

அந்த வீட்டிற்குள் சென்றபோது கம்பிகள், இரும்புச் சட்டங்கள் காணப்பட்டதுடன் இரத்தக் கறையும் சுவரில் படிந்திருந்தது. அறைக்குள் கொண்டு சென்று சில நிமிடங்களில் பின்பக்கமாக வந்த ஒருவர் எனது கண்களை மூடி துணி ஒன்றைக் கட்டினார்.

பின் இரும்புச் சங்கிலியால் இரண்டு கைகளையும் சேர்த்து வரிந்து கட்டினார். பின்னர் எனது வீட்டுத் தொலைபேசி இலக்கத்தைக் கூறுமாறு கேட்டார். எனக்குத் தெரியாது எனக் கூற மிரட்டினார்.

அதனால் எனது கைத்தொலைபேசியை அவரிடம் வழங்கி அதில் உள்ளதாகத் தெரிவித்தேன். பின்னர் அவர் எனது வீட்டிற்குத் தொடர்பு கொண்டு கப்பம் கோரியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அதன் பின் எனது வாய்க்குள் துணியை வைத்துவிட்டனர் என்றார். இதேவேளை நடந்த சம்பவங்கள் எவையும் தமக்குத் தெரியாது எனக் கடத்தப்பட்டவர்கள் அடைக்கப்பட்ட வீட்டுக்கு அருகில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இரவு கூக்குரல் கேட்டதாகவும் தாம் சென்று விசாரித்தபோது எதுவும் தெரியவரவில்லை எனவும் கூறினர். (ச-5)

## நாடாளுமன்ற கன்னி உரை...

ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் தனிநபர் மற்றும் ஊடக சுதந்திரமும் தேவை என்று அவர் கூறினார். தான் வருத்தத்துடன் பேசுவதாக கூறிய அவர், பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி தான் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெள்ளை உடையில் வந்திருந்த பொன்சேகா எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கைகுலுக்கிக் கொண்டதுடன் பார்வையாளர் அமரும் பகுதியை நோக்கி கையசைத்தார்.

அவர் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் அரசியலில் தலையீடு செய்தார் என்ற குற்றச்சாட்டு உட்பட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஒரு இராணுவ நீதிமன்றத்தின் முன்னர் விசாரிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று மறுத்துள்ள அவர், அந்த இராணுவ நீதிமன்றம் அரசியல் நோக்கம் கொண்டது என்றும் கூறுகின்றார்.

அரசாங்கம் சரத் பொன்சேகா விடயத்தை மிகவும் சிக்கலுக்குரிய விடயமாகப் பார்கின்றது. செய்தியாளர்கள் அவரை அணுக அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் நாடாளுமன்ற முதல் நிகழ்வு குறித்து செய்தி வெளியிட்ட அரசாங்கத் தொலைக்காட்சி அவரது பங்களிப்பை புறக்கணித்தது. (ச-5,9)

## நாடாளு...

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்மொழிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க வழிமொழிந்தார்.

அதேவேளை குழுக்களின் பிரதித் தலைவராக ஈ. பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முருகேசு தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து புதிய சபாநாயகருக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈ.பி.டி.பி. பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். (ச-5)


கண்ணீர் அஞ்சலி

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியை
திருமதி சி.ஸ்ரீதரன் அவர்களின் அன்புக் கணவர்

அமரர்
குணரட்ணம் ஸ்ரீதரன்



அவர்கள் நேற்று (22.04.2010) இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பாதாரவிந்தங்களை சென்றடைவதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு இறைவன் மன அமைதியையும், நல்லாசியும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி,
உரும்பிராய்.

(சி-147)



தொழிற் பயிற்சிகள்



- றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
- Mobile Phone Repairing
- ஏயர் கொண்டிசனிங்



பயிற்சிகள் ஆரம்பம் : 24.04.2010

குறிப்பு: சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 071 8561654, 077 9254078

குறிப்பு: Mobile Phone Circuit Book, Transistor Data Book, IC Book விற்பனைக்குண்டு.

(சி-125)



EUROPEAN COLLEGE OF HIGHER STUDIES

இன்று வெள்ளிக்கிழமை (23.04.2010) ஆரம்பமாகின்றது

எமது தெரிவுகளாக சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகம், கல்லூரிகளின் அனுமதிகளையும் இலங்கையில் முதல் வருடத்தை பூர்த்தி செய்து எமது கல்வித்திறனை சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைக்க எமது பாரம்பரியம், சமூகவியல் என்பனவற்றை உலகிற்கு பறைசாற்றுவோம்.

GCE O/L, GCE A/L முடித்து பல்கலைக்கழக அனுமதி பெறாத திறமைமிகு மாணவர்களுக்கான சர்வதேச தரத்தில் உயர் கல்வி கற்பதற்கான ஓர் அரிய வாய்ப்பு

STUDY IN
U.K
AUSTRALIA
CANADA
CYPRUS – Germany, Italy, France

முதல் வருட கற்கையை இலங்கையில் பூர்த்தி செய்யலாம்.

Language Studies-English
- IELTS
- TOFEL
- Dip-in English

| | | |
|---|---|---|
| Management | - | Business Management |
| | | Hotel Management |
| | | Hospitality Management |
| | | Business Administration |
| Law | - | International Law and order |
| Computer Studies | - | Information Technology |
| | | Computer multimedia |
| | | Computer Hardware |
| | | Soft Ware |
| Nursing | - | Nursing |
| Q.S | - | Building Construction |

*315 1/2, Palaly Road,*
*(Parameswara Junction)*
*Thirunelvely, Jaffna.*

தொடர்பு: 021 3734747

(1239)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.